134/2-87

TAMIL

SECOND STANDARD READER.

FIFTH EDITION, 6,000—TOTAL COPIES, 25,000.

இரண்டாம்

ஸ்டாண்டர்ட் புஸ்தகம்.

MADRAS:
THE CHRISTIAN VERNACULAR EDUCATION SOCIETY.
S. P. C. K. PRESS, VEPERY.
1886.

114298

Printed at the S. P. C. K. Press. 1886.

2 1558
474 - 81186

பொருள் அட்டவணை.

பாடம்.	பக்கம்.
1. புதுப் புஸ்தகம்	1
2. இரண்டு எறும்புகள்	2
3. எருது	4
4. உன்னை உண்டாக்கினவர் யார்?	5
5. இரண்டு பைகள்	6
6. சரீரம்	7
7. என் தாயார்	8
8. மனுஷனும் வாத்தும் ...	10
9. பசுமாடு	11
10. தேவன் சர்வ சிருஷ்டி கர்த்தா	12
11. நாயும் எருதும்	13
12. [illegible]	15
13. நம்மைக் காண்கிறதார்?	16
14. பூனை	17
15. ஆத்துமா	18
16. பையனும், முந்திரிக்கொட்டைகளும்	19
17. மண்ணுண்டையும், மல்லிகைப்புஷ்பமும் ..	20
18. மூக்கும் வாயும்	21
19. எருமை	22
20. ஈயும் தேனும்	23
21. [illegible] வகை	24
22. கடவுளுக்கு எல்லாம் தெரியும்	26
23. தானியக் கதிர்	27
24. காலம்	28
25. சிறுபிள்ளையும் கிளிப்பிள்ளையும்	29
26. குள்ளநரியும் பழக்குலையும்	30
27. நாய்	32
28. ஆதித்தாய் தந்தை	33
29. கழுகும் குழந்தையும்...	34
30. கண்	36
31. சத்தியத்தைப் பேசு ...	37
32. காகமும் அன்னமும் ...	38
33. பெட்டைக்கோழி	39
34. எது பாவம்?	41
35. இரண்டு [illegible] கதை	42
36. வாழைமரம்	43
37. கழுதையும் [illegible] வேறு கழுதையும்	44
38. பொன்காசு	45
39. ஆந்தை	46
40. லோக இரக்ஷகர்	47
41. விழுந்துபோன குருவிக் கூடு	49
42. காது	50
43. தவளையும் எருதும்	51
44. எப்பொழுதும் நிஜத்தைப் பேசு	52
45. காகம்	53
46. இரட்சிப்பின் வழி	54
47. புல்லும் புஷ்பமும்....	55

பாடம்.	பக்கம்.
48. பூனைக்குட்டி	57
49. விருட்சம்	58
50. பேராசையுள்ளநாய் ...	59
51. இந்தியா	60
52. நல்ல மறுமொழி	61
53. கீழ்ப்படிதலுள்ள பையன்	63
54. பாடசாலைக்குப் போகும் சிறுபெண்	64
55. தேக்கும் நாணலும்	65
56. அது பழைய வழக்கம்.	66
57. வாத்து	67
58. ஜெபம்	69
59. பூகோளம்	70
60. ஒரு பையனும் அவனுடைய கையெழுத்தும்.	71
61. பருந்து	72
62. பண[illegible]	74
63. கிணற்[illegible] விழுந்த குள்ளநரி	75
64. மற்றவர்[illegible]ளுக்கு நாம் [illegible]யும் கடமை ..	76
65. சுகத்தைப் பேணும் முறை	77
66. அடிக்கு உதை தகாது ...	78
67. மச்சங்கள்	79
68. இயேசு சிறுவர்மேல் காட்டிய அன்பு.......	81
69. பனைமரமும் சுரைச்செடியும்	82
70. நாம் எல்லாரும் சகோதரர்	83
71. அது தேருகிறவகை அல்ல	85
72. சூரியனும் சந்திரனும்...	86
73. இரக்கமின்மை	87
74. முட்செவ்வந்தி	89
75. [illegible]ாக்கியமுள்ள ஏழை...	90
76. எறும்பு[illegible].......	92
77. களவைக் குறித்து	93
78. நோய்கொண்ட யானை...	94
79. ஜலம்	96
80. இதுவே தருணம்	97
ஆத்திசூடி (சுருக்கம்).	101

SECOND READER.

இரண்டாம் வாசக புஸ்தகம்.

1. புதுப் புஸ்தகம். க.

அரும்பதங்கள்	வருத்தமான வார்த்தைகள்.
அங்கங்கே	ஊடே ஊடே, பல இடங்களில்.
எறும்பூர	எறும்புநகர, நகர.
கற்குழியும்	கல்லும் குழியாகும்.
பழமொழி	முதியோர்சொன்ன போதனைவாக்கியம்.
அநுதினமும்	ஒவ்வொருநாளும்.
அறப்படித்து	நன்றாய்ப் படித்து.
அணை	கரை, மண்மேடு.
வெள்ளம்	ஜலத்திரள், அதிகத்தண்ணீர்.
பிரதிதினமும்	நாடோறும்.
முயலுவது	பிரயாசப்படுவது.

அண்ணா! வாரும், வாரும்; இதோ என்னுடைய புதிய புஸ்தகத்தைப் பாரும்; முதலாம் வாசக புஸ்தகத்

தைப் படித்தாயிற்று, இதைத் துவக்கப்போகிறேன். இது நல்ல புஸ்தகம்போலிருக்கிறது. இதில் பல அரும் பதங்கள் அங்கங்கே வருகின்றன. ஆனாலுமென்ன? "எறும்பூரக்கற்குழியும்" என்கிற் பழமொழிபோல அநுதினமும் சில பதங்கள் படித்தால் அரும்பதங்களையெல்லாம் அறப்படித்துவிடமாட்டேனா!

இனிமேல் நான் ஒரு நிமிஷத்தையும் வீணில் கழிக்கலாகாது. கடந்துபோன காலம் திரும்பவும் வருமா? "அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வராது" என்கிற பழமொழிப்படி நம்மைக் கடந்தகாலம் மறுபடியும் வரமாட்டாது.

அண்ணா! நான் நாடோறும், புதிதாய்க் கொஞ்சமாவது படிக்கும்படி பிரயாசப்படுவது புத்தியல்லவா?— ஆம் ஆம் தம்பி! அது புத்திதான், அதனோடு, நீ முன் இருந்ததைப் பார்க்கிலும் பிரதிதினமும் கொஞ்சம் கொஞ்சமாவது நல்லவனாக முயலுவது அதிக புத்தியாய் இருக்கும்.

2. இரண்டு எறும்புகள். உ.

சாலை	இருபக்கமும் மரமுள்ள பெரும்பாதை.
கொட்டாங்கச்சி	தேங்காய்ச் சிரட்டை.
மலைப்பளுவாய்	மலை அவ்வளவு பாரமாய்.
அவஸ்தையை	வருத்தத்தை.
அதனிலும்	அதைப்பார்க்கிலும்.
அப்புறம்	அதன்பின்பு.
ஏகமாய்	ஒன்றாய்.
வளைக்குள்	துவாரத்துக்குள்.
துணை	உதவி, ஒத்தாசை.
சும்மாயிருப்பது	யாதொரு உதவியும் செய்யாமலிருப்பது
சிறந்தது	மேன்மையானது.

நான் ஒரு சாலைமரத்தடியில் உட்கார்ந்திருக்கையில் ஒரு சிற்றெறும்பு செத்துப்போன ஒரு ஈயை இழுத்துக்

கொண்டுபோகப் பிரயாசப்படுகிறதைக் கண்டேன். அந்த ஈயை எறும்பு தன்னாலானமட்டும் இழுத்து இழுத்துப்பார்த்தும் அது அசையவில்லை. "எறும்புக்குக் கொட்டாங்கச்சித் தண்ணீர் சமுத்திரம்" என்கிற பழமொழியைப்போல, செத்த ஈ அதற்கு மலைப்பளுவாயிருந்தது.

அச்சிற்றெறும்பு படும் அவஸ்தையை அதனிலும் பெரிய ஒரு எறும்பு கண்டு, அதற்கு உதவிசெய்யப் போனது. அப்புறம் இரண்டு எறும்புகளும் ஏகமாய் அந்த ஈயைக் கடித்து இழுத்துத் தங்கள் வளைக்குள் சேர்த்துக்கொண்டது.

இந்தப் பெரிய எறும்பு செய்ததுபோல நீயும் செய்ய வேண்டியது. அதெப்படி என்பாயோ? அப்பெரிய எறும்பு ஒரு சிற்றெறும்புக்கு உதவிசெய்ததல்லவா! அப்படியே நீயும் மற்றவர்களுக்குத் துணைசெய்ய முந்திக்கொள்ளவேண்டும். பிறருக்குப் பிரயோஜனமாயிருக்கும்படி பிரயாசப்படுவது சும்மாயிருப்பதிலும் சிறந்தது.

3 எருது. ௩.

பருத்தது .... புஷ்டியானது.
பலத்தது ... . வல்லமையுள்ளது.
தடிப்பம் .... திண்ணம்.
கருமை ... . கறுப்பு.
ராசி .... வகுப்பு, இனம்.
விரிந்து .... பிளந்து.
மீண்டும் .... மறுபடியும்.
அதக்கும் ... ... அரைக்கும், சதைக்கும்.
கலப்பை .... பூமியை உழுகிற கருவி.

எருது பருத்ததும் பலத்ததுமான ஒரு மிருகம். அதன் தோல் தடிப்பமாயிருக்கும், அதின் மயிர் வெண்மை அல்லது கருமை அல்லது சிவப்பாய் இருக்கும். அதின் பாதங்கள் பிளந்து கல்லைப்போல கடினமாயிருக்கும், அவைகள் குளம்புகள் என்று சொல்லப்படும். எருதின் தலையில் இரண்டு கொம்புகளுண்டு. கொம்புள்ள மிருகராசிகளுக்கெல்லாம் குளம்புகள் விரிந்திருக்கின்றன.

எருது புல்லையும் வைக்கோலையும் தின்னும். அது புல்லை மேய்ந்துகொண்டே நடந்துபோகும்; அப்புறம் அது நின்றுகொண்டு அல்லது படுத்துக்கொண்டு தான் மேய்ந்த இரையை மீண்டும் வாய்க்குள் இழுத்து அதக்கும்; இது அசைபோடுகிறது என்று சொல்லப்படும்.

எருது கலப்பைகளையும் வண்டில்களையும் இழுக்கும். எருதுகளால் நமக்குப் பிரயோஜனமிருக்கிறபடியால் அவைகளை நாம் பட்சமாய் நடத்தவேண்டும்.

4. உன்னை உண்டாக்கினவர் யார்? ௪.

சர்வஜனங்கள் .... எல்லாமனுஷர்.
சிருஷ்டித்தவர் .... உண்டாக்கினவர்.
முகரும்படி .... வாசனை அறியும்படி.
ருசிக்கும்படி .... சுவை அறியும்படி.
புத்தி .... அறிவு.
அவனருளற்றால் .... கடவுளுடைய கிருபை இல்லாவிட்டால்.
அனைவருமற்றார் ...... சகல மனுஷரும் சாவார்கள்.
கிருபையும் .... இரக்கமும்.

என்னையும், இவ்வுலகத்திலுள்ள சர்வஜனங்களையும் சிருஷ்டித்தவர் யார்? நான் கேட்கும்படி காதையும், காணும்படி கண்ணையும், முகரும்படி மூக்கையும், பேசும்படி வாயையும், ருசிக்கும்படி நாவையும், நடக்கும்படி கால்களையும், பாதங்களையும், நன்மை தீமை அறியும்படி புத்தியையும், சாகாத ஆத்துமாவையும் எனக்குத் தந்தது யார்? தேவனே தந்தார்.

தேவனே தினந்தினம் என்னை ஜீவனோடு காப்பாற்றுகிறார். "அவன் அருள் அற்றால் அனைவரும் அற்றார்" என்கிற பழமொழிப்படி, தேவன் என் ஜீவனை அன்றன்றும் பேணாவிடில் நான் சாகவேண்டியது. ஆ, தேவன் எவ்வளவு நன்மையும் கிருபையும் உள்ளவராய் இருக்கிறார்! நான் அவரை நேசித்து, அவர் நல்லவராகையால் நானும் நல்லவனாகும்படி முயற்சி செய்வேனாக.

5. இரண்டு பைகள். ரு.

பைகள்	சாக்குகள்.
மார்பிலும்	நெஞ்சிலும்.
மற்றொன்று	வேறே ஒன்று.
குற்றங்கள்	தப்பிதங்கள்.
தம்	தங்களுடைய.
பிறர்	அந்நியர், மற்றவர்கள்.
குறைவுகள்	செய்யாமல் விட்ட கடமைகள்.
தூற்றி	புறங்கூறி, நிந்தைப்பேசி.

ஒவ்வொரு மனுஷனுக்கும் இரண்டு பைகள் இருக்கிறதாக நினைத்துக்கொள்ளவேண்டும். அதில் ஒன்று மார்பிலும், மற்றொன்று முதுகிலும் தொங்குகின்றது. இரண்டு பைகளும் குற்றங்களால் நிறைந்திருக்கின்றன; ஆனால் மார்பில் தொங்கும் பை பிறர் குற்றங்களாலும், முதுகில் தொங்கும் பை தன் குற்றங்களாலும் நிரம்பி இருக்கிறது. அதுபோல மனுஷர் தம் குற்றம் பாரார்கள்; பிறர் குற்றமோ நன்றாய்ப் பார்க்கிறார்கள். "தன் குற்றமிருக்கப் பிறர் குற்றம் பார்க்கிறதா" என்று ஒரு பழமொழியுமுண்டு.

ஒவ்வொருவனும் தன் தன்னுடைய குறைவுகளை நினைத்து, அக்குறைவுகளை நீக்கிப்போடப் பிரயாசப்படுவது புத்தி. மற்றவர்களுடைய குறைவுகளைக் கண்டுபிடித்துத் தூற்றிக்கொண்டு திரிகிறதிலும் தன் குறைவுகளை உணர்ந்துகொண்டு அமைதலாயிருப்பது நன்மையாயிருக்கும்.

6. சரீரம். ௬.

உயர்ந்த ஸ்தானம்......	மேலான இடம்.
அவயவங்கள்	தேகத்தின் பல உறுப்புகள்.
அமைக்கப்பட்டு	வைக்கப்பட்டு, ஸ்தாபிக்கப்பட்டு.
எண்சாணுடம்பு	எட்டுச்சாணுள்ள தேகம்.
சிரசே.......	தலையே.
வலம்...	வலதுகைப்பக்கம்.
இடம்	இடதுகைப்பக்கம்.
இடுப்பு........	அரை.
புயம்......	முழங்கைக்கு மேலுள்ள பாகம்.
திரிய......	நடக்க.
முடவன்	கால் இல்லாதவன்.

எனக்கு ஒரு சரீரமிருக்கின்றது. தலையானது சரீர உறுப்புகள் எல்லாவற்றிலும் உயர்ந்த ஸ்தானத்திலிருக்கிறது. அது தேகம் முழுவதையும் நடத்தும்படியாகவே எல்லா அவ்யவங்களுக்கும் மேலே அமைக்கப்பட்டிருக்கிறது. "எண்சாணுடம்பிற்கும் சிரசே பிரதானம்" என்கிற பழமொழியுமுண்டு. தலையை நமது

இஷ்டப்பிரகாரம் உயர்த்தவும் தாழ்த்தவும் வலம் இடம் திருப்பவும் கூடும்.

கழுத்துமுதல் இடுப்புவரையுமுள்ள உடல் தேக உறுப்புகள் எல்லாவற்றிலும் பெரிது. தோள், மார்பு, வயிறு, முதுகு ஆகிய இவைகள் உடலின் பங்குகள்.

புயங்கள், கைகள், விரல்கள் ஆகிய இவைகள் உடலின் மேலுறுப்புகள். தொடைகள், கால்கள், பாதங்கள், கால்விரல்கள் ஆகிய இவைகள் கீழ்உறுப்புகள். எனக்குக் கால்கள் இல்லையானால் அங்குமிங்கும் திரிய என்னால் கூடாது; ஒரு கட்டையைப்போல வைத்த இடத்தில் கிடக்கவேண்டும்; என் தலைக்குமேல் ஒரு தேன்தட்டுத் தொங்கினாலும் அதை எடுக்க என்னால் முடியாது; அது எனக்கு வேண்டுமென்று ஆசைப் பட்டாலும் கிட்டாது. "முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டதுபோல" என்கிற பழமொழியுமுண்டல்லவா?

7. என் தாயார். ஏ.

பாலகன்	குழந்தை.
பேணி	காப்பாற்றி.
கைக்குழந்தை	நடக்கக்கூடாத குழந்தை.
தாலாட்டி	தொட்டிலில் கிடத்தி பாடிப்பாடி ஆட்டித் தூங்கப்போடுகிறது.
கண்ணடையாமல்	தூங்காமல், உறங்காமல்.
மலர	சந்தோஷப்பட, சிரிக்க.
மழைமுகம் காணாத ...	மழையில்லாத.
கடமைகள்	வேலைகள், உதவிகள்.

நீ படத்தில் என்னபார்க்கிறாய்? தூங்குகிற ஒரு பாலகன் பக்கத்தில் அதின் தாய் உட்கார்ந்து காவல் காக்கிறாள் அல்லவா? எத்தனையோதரம் உன் அன்புள்ள தாயார் உன்னை இவ்விதமாய்ப் பேணி வளர்த்திருக்



ருள்! நீ கைக்குழந்தையாய் இருக்கையில் அவள் உன்னை இரவும் பகலும் தூக்கிச் சுமந்தாள்; நீ அழுத போது பாலூட்டித் தாலாட்டித் தூங்கவைத்தாள். உனக்கு நோயுண்டானபோது இராமுழுவதும் கண்ணடையாமல் உன் பக்கத்திலிருந்து பாதுகாத்தாள். உன் தாயினுடைய முகம் அடிக்கடி உன் முகத்தை மலரப்பண்ணிற்று. "தாய் முகம் காணாத பிள்ளை, மழை முகம் காணாத பயிரைப்போல் வாடும்."

உன் தாயார் தன் ஜீவகாலமெல்லாம் உனக்கு நன்மையையே செய்துவந்தாள். நீ உன் தாயாருக்குச் செய்ய வேண்டிய கடமைகளை ஒருக்காலும் மறந்துபோகாதே. அவள் மரணமடையுமட்டும் அவளை நேசித்து, கனப்படுத்தி, ஆதரிப்பது உன்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது.

8. மனுஷனும் வாத்தும். அ.

அதிசயமான	ஆச்சரியமான.
பேராசை	அதிக ஆசை.
மதிகெட்டு	புத்தியில்லாமல்.
அல்லும் பகலும்	இரவும், பகலும்.
ஆத்திரக்காரன்	படபடத்தவன், பொறுமையற்றவன்.
மட்டு	கொஞ்சம்.
மாண்டுபோன	செத்துப்போன.
நெரித்து	மடக்கிப் பிசைந்து.
வாழ்வு	பாக்கியம், வருமானம், செல்வம்.
கரணம்	தலைகீழாய் விழுதல்.
தரித்திரம்	வறுமை, எளிமை.
மிதமிஞ்சி	மட்டுமிஞ்சி, அளவுக்குமேல்.

ஒரு மனுஷனிடத்தில் அதிசயமான ஒரு வாத்திருந்தது. அது தினந்தினம் ஒரோர் பொன்முட்டை இடும்; பொன் முட்டைகளைக் காணவே அவனுக்குள் பேராசை பெருகிற்று. ஒருநாள் அந்தப் பேராசைக்காரன் மதிகெட்டு, நான் என் அல்லும் பகலும் ஆவலோடு காத்திருந்து ஒவ்வொரு முட்டையாய்ச் சேர்க்கவேண்டும்? இந்த வாத்தைக் கொன்று, இதின் வயிற்றுக்குள்ளிருக்கும் பொன் முட்டைகளை எல்லாம் மொத்தமாய் எடுத்[illegible]கொள்ளுகிறது நல்லதல்லவா! என்று சொல்லி, சட்[illegible]வாத்தைக் கொன்று முட்டைகளை எடுத்துக்

குவிக்கும்படி அறுத்துப்பார்த்தான்; ஆனல் ஒரு பொன் முட்டையாவது அகப்படவில்லை. "ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு." மாண்டுபோன வாத்து மீண்டு முட்டையிடுமா?

அப்புறம் அவன்; ஐயோ! மோசம்போனேமே என்று அழுது, உதட்டைக் கடித்து தன் கையை நெரித்துக்கொண்டான். "கடந்துபோன வாழ்வு கரணம்போட்டாலும் வருமா?" 'அதிக ஆசை மிகுந்த தரித்திரம்.' நாம் மிதமிஞ்சி ஆசைப்பட்டால் நமக்கு உள்ளதும் குறைந்துபோகும்.

9. பசுமாடு. ௯.

மொய்க்கும்	அடைந்திருக்கும்.
கும்மாளம்	துள்ளிக்குதித்தல்.
சமயத்தார்	மார்க்கத்தார்.
பிசகு	பிழை, தப்பிதம்.
ஜந்துவை	மிருகத்தை.
ஸ்துதிப்பது	புகழுவது.
வணக்கம்	தொழுதல்.
செலுத்த	கொடுக்க, படைக்க.

பசுமாடு எருதைப்போலவே இருக்கும்; ஆனல் அவ்வளவு பலமும் பருமனுமாயிராது. அதற்கு நீண்ட வாலுண்டு; அது வாலை அங்குமிங்கும் ஆட்டி தன்மேல் மொய்க்கும் ஈக்களைத் துரத்திக்கொள்ளும். பசுவிலிருந்து நாம் நல்ல பால் கறந்துகொள்ளுகி

ளூம். பசு பல நிறமானுலும் பால் ஒரே நிறம் தான். அந்தப் பாலால் தயிர், மோர், வெண்ணெய் இவைகளைச் செய்துகொள்ளலாம். பசுவிலிருந்துதான் வைசூரி குத்தும் பால் முதலாவது கண்டுபிடிக்கப்பட்டது. வைசூரிப்பாலை நாம் குத்திக்கொண்டால், அந்த நோய் வரமாட்டாது; வந்தாலும் பலம் செய்யாது.

பசுவின் குட்டி கன்று என்னப்படும். அது ஆணுனால் காளை என்றும், பெண்ணுனால் கிடாரி என்றும் சொல்லப்படும். அந்தக் கன்றுகள் கும்மாளம் போட்டுக்கொண்டு திரியும்.

இந்துசமயத்தார் பசுவை பரிசுத்த மிருகம் என்று எண்ணி வணங்குகிறூர்கள். பசுவைக் கும்பிடுவது மகா பிசகு. அவ்வளவு உபயோகமான ஜந்துவை தேவன் நமக்குத் தந்ததற்காக, அவனை ஸ்துதிப்பது நமது கடமை. வணக்கம் கடவுள் ஒருவருக்கே செலுத்தப்படவேண்டும். அவனைத்தவிர வேறே எதையாவது வணங்கினுல் அது பாவம்.

10. தேவன் சர்வ சிருஷ்டிகர்த்தா. ம.

ஆண்டுகள்	வருஷங்கள்.
ஆதி	துவக்கம், முதல்.
அந்தம்	முடிவு.
விருத்தியாகவும்	வளரவும், எழும்பவும்.
மச்சங்களும்	மீன்களும்.
பட்சிகள்	பறவைகள்.
அனைத்தையும்	சகலத்தையும்.
சர்வவல்லமை	எல்லாம் செய்யும் திறமை.
மகத்துவம்	மகிமை, கனம், மேன்மை.

அநேக ஆண்டுகளுக்குமுன்னே இந்த பூமியாவது, சூரியனுவது, சந்திரனுவது இருக்கவில்லை. இவை

கள் இல்லாவிட்டாலும் தேவன் இருந்தார். தேவனுக்கு ஆதியுமில்லை, அந்தமுமில்லை. நாம் குடியிருக்கும் இந்த பூலோகம் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டதே அல்லாமல் தன்னைத்தானே உண்டாக்கிக்கொள்ளவில்லை; அல்லது அது விருட்சங்களைப்போல வித்திலிருந்து விருத்தியாகவுமில்லை.

சிருஷ்டிப்பது என்றால் ஒன்றுமில்லாமையிலிருந்து உண்டாகச் செய்கிறதுதான். ஒன்றுமில்லாமையிலிருந்து, ஒன்று உண்டாகப்பண்ண தேவன் ஒருவராலேயே கூடும். தரையில் நடமாடும் மிருகங்களும், தண்ணீரில் நீந்தும் மச்சங்களும், ஆகாயத்தில் பறக்கும் பட்சிகளும் எல்லாம் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டது. என்னைச் சிருஷ்டித்தவரும் அவர்தான்.

அசைவுள்ளதும், அசைவற்றதுமான சராசரம் அனைத்தையும் சிருஷ்டித்த சர்வவல்லமையுள்ள தேவன் ஒருவரே. நம்மிடத்திலுள்ள பணமும், உணவும் எல்லாம் அவர் தந்தவைகள்தான். ஆ! தேவன் எவ்வளவு மகத்துவமும், நன்மையுமுள்ளவராயிருக்கிறார்!

11. நாயும் எருதும். ௰௧.

வைக்கோல்போர் ...... வைக்கோல் அடைத்திருக்கும் படப்பு.
வருந்தின .... வருத்தப்பட்ட, கஷ்டப்பட்ட.
பாய்ந்து .... சாடிப்போய்.
தகுமா? .... தகுதியா?
அனுபவிக்க .... கையாள.
இடங்கொடுக்கிறதில்லை.. சம்மதிக்கிறதில்லை.

ஒருநாள் ஒரு பெரிய நாய் ஒரு வைக்கோல் போரின்மேல் படுத்துக்கொண்டிருந்தது. பசியால் வருந்தின எருதொன்று அந்தப் போரில் வைக்கோல் தின்

னும்படி போயிற்று. எருது போனபோது போரின் மேல் படுத்திருந்த நாய் உறுமிக்கொண்டு, புலிபோல் பாய்ந்து, சள் சள் என்று குலைத்து அவ்வெருதைக் கடிக்க ஓடினது. "நாய்க்குத் தேங்காய் தகுமா?" என்கிற பழமொழிபோல இந்த நாய்க்கு வைக்கோல் என்னத்துக்கு? எருது நாயைப்பார்த்து: "என்ன அப்பா! இந்த வைக்கோலை நீ தின்னவுமாட்டாய், தின்னுகிறவர்களைத் தின்னவும் விடமாட்டேன் என்கிறாயே" என்று சொல்லிற்று.

சில மனுஷர் தங்களுக்கு ஒருபொருள் அவசியம் இல்லாதிருந்தாலும் அந்தப் பொருளை மற்றவர்கள் அநுபவிக்க இடங்கொடுக்கிறதில்லை. இப்படிப்பட்டவர்கள் வைக்கோல் போரின்மேல் படுத்துக்கொண்டு, தானும் தின்னாமல், தின்னவந்த மாட்டையும் துரத்தின நாயின் குணத்துக்கு ஒத்த குணமுடையவர்களாய் இருக்கிறார்கள்.

12. நெல் வயல். ௰௨.

வரப்பு .... தாழ்ந்த மண்மேடு.
செழிப்பு .... பசுமை, நல்லபயிர்.
சென்றால் .... கழிந்தால், போனால்.
கதிர்வாங்கி .... கதிர்விட்டு.
மணியாகி .... தானியமாகி.
பழுப்புநிறம் .... பழத்தின் நிறம்.
களம் .... தானியத்தைப் பிரிக்கும் இடம்.
போரடித்து .... அறுத்த பயிரை மாடுகளால் மிதித்து.
களஞ்சியம் .... தானியத்தைக் கட்டிவைக்கும் இடம்.
உலை .... அடுப்பு.
அமுது .... சோறு, சாப்பாடு.
உணவு .... ஆகாரம்.

வேலியில்லாமல் வரப்பினால் சூழப்பட்ட நன்செய் நிலங்களுக்கு வயல் அல்லது கழனி என்று பெயர். நன்செய் நிலங்களில் பெரும்பாலும் நெல் விதைக்கப்படும். உமி போனால் நெல் முளையாது.

நெல், பயிராய் இருக்கையில் எத்தனை சிறப்பும் செழிப்புமாய்த் தோன்றுகிறது. கொஞ்சக்காலம் சென்றால் அவைகள் கதிர்வாங்கி, முதிர்ந்து, மணியாகி, பழுப்புநிறமாய்க் காணப்படும், அப்போது அறுப்பார்கள். அறுத்தபின் களத்தில் போட்டுப் போரடித்து, மணிகளைக் களஞ்சியங்களில் சேர்த்துக்கொண்டு, வைக்கோலைப் படப்பு வேய்ந்து மாடுகளுக்கு இரையாக பத்திரம் செய்துகொள்ளுவார்கள். நெல்லை உரலில் போட்டுக் குத்தி உமியையும் தவிட்டையும் போக்கினால் அரிசியாகும்; அந்த அரிசியை உலையில் இட்டுச் சமைத்தால், அரிசி வெந்து அமுதாகும்.

தேவன் முதலாவது நெல்லை உண்டாக்கினார், நெல்லை அவர் வயல்களில் முளைக்கப்பண்ணி, அதில் கதிர் எழும்பச்செய்து, அக்கதிரை தானியங்களால் நிரப்புகிறார். ஆகையால் நாம் உண்ணும் உணவுக்காக தேவனை ஸ்தோத்திரிக்கவேண்டும்.

13. நம்மைக் காண்கிறதார்? ௰௩.

தோப்பு	மரங்கள் நிறைந்த தோட்டம்.
சிநேகிதன்	இஷ்டன்.
வெறுங்கை	கையில் ஒன்றுமில்லாதிருக்கிறது.
இளநீர்	முற்ருத தேங்காய்.
வேளை	தருணம், சாவகாசம்.
வாய்க்குமா?	இடைக்குமா, கிட்டுமா?
மறைந்த	தெரியாத, மறைவான.
கருமம்	செய்கை, கிரியை.

ஒருநாள் ஒரு பையன் தென்னந்தோப்புக்குள்ளிருந்து வெளியே வந்தான். அந்த வேளையில் அவனுடைய சிநேகிதன் ஒருவன் தோப்பின் வாசலில் வந்து நின்ருன். தோப்புக்குள் யார் இருக்கிருர்கள்? என்று வந்த சிநேகிதன் கேட்டான்; "யாருமில்லை" என்று பையன் சொன்னுன்;—பின்னை ஏன் வெறுங்கையாய் வந்தாய்; இரண்டொரு தேங்காயாவது, இளநீராவது, கையோடு கொண்டுவாக்கூடாதா? உன்னைப் பார்க்க யாருமில்லையல்லவா? இதைப்போலொத்த வேளை இனி வாய்க்குமா?" என்று சொன்னுன்.

அப்பொழுது பையன் பிரமைகொண்டு: "பார்க்க யாருமில்லையா? என்னைப் பார்க்க நானிருந்தேன் அல்லவா? ஒரு இழிவான காரியத்தை நான் செய்வதை நானே பார்க்க எனக்குப் பிரியமில்லை" என்று சொன்னுன்.

எவரும் உன்னைப் பார்க்கவில்லை என்று நினைத்துக்கொண்டு தப்பிதங்களைச் செய்யாதே. நீ உன்னைப் பார்க்கிறதோடு தேவனும் பார்த்துக்கொள்ளுகிருர். கடவுளுக்கு மறைந்த கருமம் இல்லை. அதாவது தேவன் பார்த்துக்கொள்ளாத செய்கை இல்லை. நாம் செய்யும் ஒவ்வொரு கிரியையைக்குறித்தும் கடவுள் நன்மை நியாயம் விசாரிப்பார்.

14. பூனை. ௰சு.

மெல்லியது ..... மிருதுவானது.
கூராய் .... ஊசிபோல், கூர்மையாய்.
பீறி .... கீறி.
பறண்டி ...... காலால் கீறி.
சுசியாய் ...... சுத்தமாய்.

அநேக வீடுகளில் பூனை வளர்க்கிறார்கள். அதின் ரோமம் நேர்த்தியாயும் மெல்லிதாயுமிருக்கிறது. அதின் பற்களும் கால் நகங்களும் கூராயிருக்கின்றன. மரங்களில் முதலாய் பூனை விசையாய் ஏறும். அதின் வாலைப் பிடித்து இழுத்தால் சும்மாயிருக்குமா? சும்மாயிராது,—அது தன் கூரிய நகங்களால் உன்னைப் பீறிக் கடிக்கும். பூனையின் கண்கள் இருட்டிலும் பார்க்கத் தக்கதாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதினாலேதான் இரவில் நடமாடும் எலிகளையும் மூஞ்சூறுகளையும் பிடித்துக்கொள்ளுகிறது.

பூனைக்குச் சந்தோஷம் வந்தால் பறண்டி உறுமும்; பசி எடுத்தால் மியா மியா என்று கூப்பிடும்; கோபம் வந்தால் சீறும். பூனை தன் முன்னங்கால்களால் முகத்தைத் துடைத்துக்கொள்ளும். எல்லாப் பிள்ளைகளும், தங்கள் கைகளையும் முகங்களையும் சுசியாய் வைத்துக் கொள்ளும்படி பூனைகளிடம் கற்றுக்கொண்டால் மெத்த நன்மையாயிருக்கும்.

15. ஆத்துமா. ௧௫.

சதை	மாமிசம், இறைச்சி.
உதிரம்	இரத்தம்.
ரூபம்	சாயல், உருவம்.
நலம்	நன்மை.
நஷ்டம்	தீமை.
பகுத்து	வித்தியாசப்படுத்தி.
ஆகவே	ஆனபடியால்.
ஜெபிக்க	வேண்டிக்கொள்ள.
அருமை	விலையுயர்ந்தது.

ஒரு தேகத்தை தேவன் உனக்குத் தந்திருக்கிறார் அல்லவா? உன்னுடைய தேகம் எது என்று உனக்குத் தெரியுமே. உன் கண்களால் பார்க்கவும், கைகளால் தொடவும் கூடிய சரீரத்தின் உறுப்புகளெல்லாம் உன்னுடைய தேகமாயிருக்கின்றன.

ஒரு தேகம் கொடுக்கப்பட்டிருக்கிறதுபோலவே ஒரு ஆத்துமாவும் உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேகமானது சதையினாலும் உதிரத்தினாலும் அமைக்கப்பட்டிருக்கிறதுபோல ஆத்துமா அமைக்கப்பட்டிருக்கவில்லை; அதற்கு ரூபம் இல்லாதபடியால் அதைப் பார்க்கக்கூடாது. ஆனால் ஆத்துமாவைக்கொண்டு நீ நினைக்கலாம், நேசிக்கலாம், நலம் இன்னது, நஷ்டம் இன்னது என்று பகுத்தறியலாம்.

மிருகஜாதிகளுக்கு ஆத்துமா இல்லை; ஆகவே அவைகள் தேவனைக்குறித்து நினைக்கவாவது தேவனை நோக்கி ஜெபிக்கவாவது கூடாது. மரணம் வரும்போது நமது சரீரம்மாத்திரம் சாகிறது, ஆத்துமாவோ சாகாமல் சரீரத்தைவிட்டுப் பிரிந்துபோய்விடுகிறது.

ஆத்துமாவுக்குச் சாவு இல்லை. நமக்கு உள்ளதெல்லாவற்றிலும் ஆத்துமாவே விசேஷமும் அருமையுமானது.

16. பையனும், முந்திரிக்கோட்டைகளும். ௰௬.

மாடம்	சுவரில் செய்யப்பட்ட சிறு அறை.
ரெப்பி	நிறைத்து.
கடும்பாடு	அதிக வருத்தம்.
பாதி	அரைப்பங்கு.
மீதி	மிச்சம்.

ஒரு வீட்டின் மாடத்தில் முந்திரிக்கொட்டைகள் ரெப்பியிருந்த ஒரு கலயமிருந்தது. அவ்வீட்டுப் பையன் ஒருவன் அந்தக் கலயத்தை எடுத்து, அதனுள் கையைப் போட்டு தன் கை நிறைய வாரினான்; வாரிக் கொண்ட அவ்வளவு கொட்டையோடும் கையை எடுக் கப் பார்த்தான், அந்தக் கலயத்தின் வாய் சிறிதாயிருந்த படியால் கை வெளியே வரவில்லை. அவன் தான் வாரின கொட்டைகளில் ஒன்றையும் விடேன் என்று, பலமாய்ப் பிடித்துக்கொண்டு கையை வெளியே எடுக்க இழுத்தான்; எவ்வளவு பலமாய் இழுத்தானோ அவ் வளவு அவன் நோவு அதிகப்பட்டது. கை நோவால் கண்ணீர் விழுந்தாலும் வாரின கொட்டைகளை விட அவனுக்கு மனமில்லை.

பையன் கடும்பாடு படுகிறதைப் பக்கத்தில் நின்ற ஒரு மனுஷன் பார்த்து: “என் அப்படி அவஸ்தைப்

படுகிறாய் அப்பா! பாதியை விட்டுவிட்டு மீதியை வைத்துக்கொண்டு கையை எடுத்துப்பார்" என்று சொன்னான். பையன் அப்படியே செய்தான், முன் வரமாட்டாத கை லேசாய் வெளியே வந்துவிட்டது. பேராசை நல்லதல்ல. "பேராசை தரித்திரம், தீராத உபத்திரவம்" என்று ஒரு பழமொழியுமுண்டு.

17. மண்ணுண்டையும், மல்லிகைப் புஷ்பமும்.

சந்தனம் .... வாசனையுள்ள ஒரு மரம்.
கஸ்தூரி .... மணமுள்ள ஒரு சரக்கு.
காசுக்குதவாத ...... மகா கேவலமான, தாழ்வான.
புஷ்பம் .... பூ, புட்பம்.
யோக்கியன் ...... நல்லவன், புத்திமான்.
அயோக்கியன் ...... துஷ்டன், சீர்கெட்டவன்.

ஒருநாள் ஒரு மனுஷன் மண்ணுண்டை ஒன்றை என் கையில் கொடுத்து, இதை மோந்து பார் என்று சொல்லிவிட்டுப் போனான். நான் அதை முகரவே அது கமகமவென மணத்தது. அப்போது நான்: "ஆகா நல்லவாசனை வருகிறதே, இது சந்தனமா, கஸ்தூரியா" என்று என் வாய்க்குள் சொல்லிக்கொண்டேன். உடனே அந்த மண்ணுண்டை என்னைப் பார்த்து:—"ஐயா, நான் சந்தனமுமல்ல கஸ்தூரியுமல்ல, காசுக்குதவாத களிமண்; அநேக வருஷங்களாய் என்னை மல்லிகைப் புஷ்பங்களோடு போட்டுவைத்திருந்தார்கள்; "பூவால், நாரும் மணம்பெற்றது" என்கிற வாசகத்தின்படி, அந்த மல்லிகை மலரின் மணத்தால் நானும் மணமானேன்; மற்றப்படி நான் வெறும் களிமண்தான்" என்று சொன்னது.

தம்பி! நீ நல்ல பையனாகவேண்டுமென்று விரும்பினால் யோக்கியரோடு சிநேகமாயிருக்கவேண்டும். துஷ்டரோடு கூடிக்கொள்ளும் யோக்கியனும் கொஞ்சநாட்களுக்குள் அயோக்கியனாகிவிடுவான்.

18. மூக்கும் வாயும். ம அ.

நற்கந்தம் ...... நல்லவாசனை.
துர்க்கந்தம் .... நாற்றம், கெட்டவாசனை.
மந்திரி .... இராஜாவுக்கு ஆலோசனை சொல்லுகிறவன்.
தட்டை ..... சமமாய், மேடுபள்ளமில்லாமல்.
அகன்று ...... படர்ந்து, விரிந்து.
யந்திரம் .... திரிகை, அரைக்கும் கல்.
மெல்லு .... சாப்பிடு, விழுங்கு.
உச்சரிக்க .... பேச, சொல்ல.
கருத்தை ...... எண்ணத்தை, நோக்கத்தை.
வெளியிட .... பேச, சொல்ல.
சாடை .... அடையாளம், சைகை.

மூக்கானது முகத்தின் உறுப்புகளில் ஒன்று, இதினால் வாசனைகளை உணர்ந்துகொண்டு, இது நற்கந்தம் இது துர்க்கந்தம் என்று தீர்மானிக்கிறோம். மூக்கின் இருபக்கத்துத் துவாரங்களும் நாசித்துவாரங்கள் என்னப்படும்; மெல்லிய எலும்பொன்று அத்துவாரங்களைப் பிரிக்கிறது, அதற்கு மூக்குத்தண்டு என்று பேர். மூக்கு வாசனையை மோந்து, இதை எற்றுக்கொள், இதை அகற்றிவிடு என்று சொல்லிக்கொண்டிருக்கிற மந்திரியைப் போல் இருக்கிறது.

வாய் உண்ணவும் பேசவும் உதவுகிறது. முன்வாய்ப் பற்கள் தட்டையாய் அகன்று கூர்மையாயிருக்கின்றன. அவைகள் உணவுகளைக் கடிக்க உதவுகின்றன. யந்திரங்கள்போலிருக்கும் கடைவாய்ப் பற்களால் போசனத்தை அரைத்து அப்பால் மெல்லுகிறோம்.

நம்முடைய நாவு ருசி அறிகிறதோடு வார்த்தைகளை உச்சரிக்கவும் உதவுகிறது.

குதிரை தன் கருத்தை வெளியிட விரும்பினால் கனைக்கிறது, சேவல் கூவுகிறது, நாய் குரைக்கிறது, மனுஷராகிய நாமோ, நம்முடைய கருத்தைப் பேச்சினாலும் சாடையினாலும் வெளியிடுகிறோம். பேசமாட்டாதவர்கள் ஊமையர் என்னப்படுகிறார்கள்.

19. எருமை. ௰௯.

புஷ்டி	பருமன்.
நாசி	மூக்குத்துவாரங்கள்.
தலையுச்சி	உச்சந்தலை.
நிமிர்த்தி	உயர்த்தி.
மந்தை மந்தையாய்.	கூட்டங்கூட்டமாய், கும்பல்கும்பலாய்.
மூர்க்கம்	கோபமான குணம்.
கிலிபிடிக்கும்	பயமுண்டாகும்.
சாதுவாய	அமர்ந்தகுணமாய்.

எருமை புஷ்டியான உடலுள்ளது. அதின் கால் பலமும் குட்டையுமாயிருக்கும், கொம்புகளோ பின்னுக்குச் சாய்ந்து வளைந்திருக்கும். அதின் தோல் கறுப்புநிறமாயும் குறுகிய மயிருள்ளதாயும் இருக்கிறது.

எருமை தலையைத் தாழ்த்திக்கொண்டு மெதுவாய் நடக்கின்றது. தன் உடம்பில் ஈக்கள் கடியாதபடி அது சேற்றில் புரண்டுகொள்ளும். அது தன் நாசியையும் தலையுச்சியையுமாத்திரம், வெளியே நிமிர்த்திக்கொண்டு தண்ணீருக்குள் அநேக நாழிகை நேரம் கிடக்கும்.

எருமையைக்கொண்டு ஏர் உழுகிறார்கள். சில ஊர்களில் வண்டியிலும் கட்டுகிறார்கள். எருதுகளைப் போல எருமைகள் விசையாய் இழுக்கமாட்டாது. பெண் எருமை பால் அதிகம் கறக்கும்.

ஆப்பிரிக்கா கண்டத்து தென்பாகத்தின் வனங்களில் காட்டெருமைகள் மந்தை மந்தையாகத் திரியும், அவைகள் மகா மூர்க்கமுள்ளவைகள், கண்டவுடனே கிலிபிடிக்கும். வீட்டில் வளரும் எருமைகளோ அதிக சாதுவாயிருக்கும்.

20. ஈயும் தேனும். உம.

கலயம்........ .... சிறு மண்பாத்திரம்.
அளவில்லை .... எல்லை இல்லை, அதிகம்.
மகிழ்ச்சி .... சந்தோஷம்.
மதிமயங்கி .... புத்தி தடுமாறி.
சிக்கு.............. பின்னல், ஒட்டு.
மாண்டது .... மரித்துப்போனது.
சிற்றின்பவாழ்வு .... உலக இன்பங்கள்.
நாசமாய் .... அழிவாய், சேதமாய்.
அசட்டைசெய்து .... தள்ளிவிட்டு.
பேரின்பவாழ்வு ... மோட்சவாழ்வு.
நாடு .... விரும்பு, நோக்கு.

ஒரு சிறு கலயத்தில் தேன் வைத்திருந்ததை ஒரு ஈ கண்டு: ஆகா, நல்ல உணவு அகப்பட்டது என்று அது அடைந்த சந்தோஷத்துக்கு அளவில்லை. அந்த ஈ புத்தியுள்ளதானால் கலயத்தின் ஓரத்திலிருந்துகொண்டு உறிஞ்சி அல்லோ குடிக்கும்? அது தன் மகிழ்ச்சியால் மதிமயங்கி, தேனில் இறங்கிக் குடிப்போம் என்று அதற்குள் விழுந்து குடித்தது. தன்னுடைய

வயிறுநிறையக் குடித்தபின் வெளியேவர எழும்பிப் பறந்துபார்த்தும் கூடாமற்போயிற்று. அதின் கால்கள் சிறகுகள் எல்லாம் தேனில் சிக்குண்டு இருந்தது. மறுபடியும் அது வெளியே எழும்ப எவ்வளவு பிரயாசப்பட்டதோ அவ்வளவுக்கு அதிகமாய் தேனுக்குள் ஆழ்ந்து அமிழ்ந்தி மாண்டது.

மேலே சொல்லிய ஈயின் கதையானது, சிற்றின்ப வாழ்வு ஆத்துமாவுக்கு நாசமாய் முடியும் என்கிற நல்ல போதனையை நமக்குக் காட்டுகிறது. ஆகையால் தம்பி! சிற்றின்பவாழ்வை அசட்டைசெய்து பேரின்பவாழ்வையே நாடு.

21. கீழ்ப்படியும் வகை. உக.

தந்தை	தகப்பனார்.
மாணாக்கர்	பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள்.
ஆசான்	உபாத்தியாயர்.
ஊழியன்	வேலைக்காரன்.
அதிகாரிகள்	சர்க்கார் வேலைக்காரர்.
அரசன்	இராசா.
வெடுவெடுப்பு	கோபமான நடை.
எரிச்சல்	கோபம், சினம்.
முணுமுணுப்பு. ...	வெளியே கேளாமல் வாய்க்குள் மொறு மொறுக்கிறது.

சொன்னபடி செய்வதே கீழ்ப்படிதல். பிள்ளைகள் தங்களுடைய தாய்தந்தைகளுக்கும், மாணாக்கர் தங்கள் ஆசான்மாருக்கும், ஊழியர் தங்கள் எஜமான்களுக்கும், குடிகள் தங்கள் அதிகாரிகளுக்கும் அரசனுக்கும் கீழ் அடங்கும்படி கடமைப்பட்டிருக்கிறார்கள்.

உன் தாயாராவது, தகப்பனாராவது, ஆசானாவது நியாயமான ஒரு காரியத்தைச் செய்யும்படி உத்தரவு கொடுத்தால் நீ அதை உடனே செய்யவேண்டும்,

இரண்டாந்தரம் சொல்ல வைத்துக்கொள்ளக்கூடாது. எப்படிச் செய்யச் சொல்லுவார்களோ அப்படியே செய்; அவர்கள் சொன்னதோடு, உன் இஷ்டப்படி சிலவற்றைக் கூட்டி அல்லது குறைத்துச் செய்யவேண்டாம். செய்யச்சொன்ன வேலையைச் சந்தோஷமாய்ச் செய்யவேண்டும்; இப்படி நம்மைச் செய்யும்படிச் சொல்லுகிறார்களே என்று வெடுவெடுப்பாய் நடந்து, எரிச்சலாகி, முணுமுணுப்போடு செய்யாதே.

"பிள்ளைகளே! உங்கள் பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள், இது கர்த்தருக்குப் பிரியமானது" என்று சத்தியவேதம் சொல்லுகிறது. நீ கீழ்ப்படிதலுள்ள பிள்ளையாய் இருந்தால் அதினால் உனக்கு அதிக பாக்கியமுண்டாகும்; கீழ்ப்படியாத பிள்ளைகளின் காரியம் அடிக்கடி நிர்ப்பாக்கியமாய் முடிகிறது.

22. கடவுளுக்கு எல்லாம் தெரியும். உஉ.

சர்வவியாபி .... ஒவ்வொரு நேரமும் எல்லா இடங்களிலும் இருக்கிறவர்.
ஒளி .... வெளிச்சம், பகல்.
அறை .... சிறுவீடு.
யாதாமொரு .... எந்த ஒரு.
அந்நிமிஷமே .... உடனே, அந்நேரமே.
அருவருக்கிறார் .... வெறுக்கிறார்.
நீதி .... நேர்மை, உண்மை.
தயை .... இரக்கம், சகாயம்.
தீயோர் .... பொல்லாதவர்கள், பாவிகள்.
அளிப்பார் .... கொடுப்பார்.
தொண்டு .... ஊழியம், கீழ்ப்படிதல்.

தேவன் எல்லா இடங்களிலும் இருக்கிறார்; நானோ ஒரே இடத்தில்மாத்திரம் இருக்கிறேன். அவர் எங்குமிருக்கும் சர்வவியாபியானாலும் அவரைக் கண்ணாரக் காண என்னால் முடியாது. ஏன் காணமுடியாது? அவருக்கு நம்மைப்போல யாதொரு ரூபமிருந்தால் காணலாம், ரூபமில்லையே, ஆகையால் காண முடியாது. தேவனுக்கு இருளும் ஒளியும் ஒன்றுபோலிருப்பதால் அவர் என்னைக் கண்டுகொள்ளாதபடிக்கு இருட்டான ஒரு அறைக்குள் மறைந்துகொள்ளவும் என்னால் முடியாது.

என்னுடைய இருதயத்துக்குள்ளும் தேவன் பார்க்கக் கூடும், நாம் நினைக்கிறதெல்லாம் அவருக்குத் தெரியும்; யாதாமொரு தீமையைச் செய்யும்படி நான் யோசித்தால் அந்நிமிஷமே கடவுள் அந்த யோசனையை அறிந்துகொள்ளுகிறார்.

தேவன் பாவமில்லாத பரிசுத்தர். அவர் எல்லாப் பாவங்களையும் அருவருக்கிறார். அவர் மகா நீதியுடையவர்; நல்லோருக்கு தயையையும், தீயோருக்கு தண்டனையையும் அளிப்பார். தேவனுடைய கைக்குத் தப்பி ஓடிப்போக என்னால் ஆகாது. அவரை நேசித்து, அவருக்குத் தொண்டுசெய்தால் அதினால் வாழ்வுண்டு.

23. தானியக் கதிர். உ௩.

சமுசாரி ...... பயிரிட்டு ஜீவனம் செய்கிறவன், குடியானவன்.
அண்டை .... கிட்ட, சமீபம்.
மடிந்து ...... சாய்ந்து, மடங்கிவிழுந்து.
பிரபு .... மகராசன், பணக்காரன்.
பிதா..... .... தகப்பன்.
புன்னகை .... வாய்க்குள் சிரித்தல்.
விளக்கி ...... விவரமாய், தெளிவாய்.
மரியாதை .... மற்றவர்களை வணங்குதல்.
வீம்பு .... பெருமை, ஆணவம்.

ஒரு சமுசாரி தன் இளைய மகனை ஒருநாள் கூப்பிட்டு: "அப்பா! வயலைப் பார்க்கப் போகலாம் வருகிறாயா? பயிர் விளைந்திருக்கிறதா அல்லவா என்று பார்க்கப் போகிறேன்" என்று சொன்னான். அச்சிறுவன் அதைக் கேட்டவுடனே குதித்தோடிவந்து, இதோ வருகிறேன் அப்பா! என்று தன் தகப்பனுடைய கையைப் பிடித்துக்கொண்டு நடந்தான்.

அவ்விருவரும் வயல் அண்டை வந்தவுடனே, மகன் கேட்கிறான்:—அப்பா, அப்பா சில கதிர் மடிந்தும் சில நிமிர்ந்தும் இருக்கிறதே இதற்கு முகாந்தரம் என்ன? மடிந்து கிடப்பது ஏழைகளும், நிமிர்ந்து நிற்பது பிரபுக்களுமோ? என்று கேட்டான்.

அதைக் கேட்ட பிதா புன்னகைகொண்டு, மடிந்த கதிரொன்றும் நிமிர்ந்த கதிரொன்றும் பிடுங்கி வைத்துக் கொண்டு: "அப்பா இதோ மடிந்த கதிரில் எவ்வளவு தானியம் இருக்கிறது பார்; நிமிர்ந்துநின்ற கதிரிலோ ஒன்றுமில்லை" என்று விளக்கிக் காட்டினான்.

அதிகப் பலனுடைய கிளைகள் வளைந்துகிடக்கும். அதுபோல நற்குணங்களால் நிறைந்த ஒருவன் அதிக தாழ்மையும் மரியாதையுமாய் இருப்பான்.

24. காலம். உ௪.

வகுத்து	பிரித்து.
சாமம்	ஏழரைநாழிகை, மூன்றுமணி.
சமம்	சரி.
தினங்கள்	நாட்கள்.
சுமார்	கொஞ்சம்குறைய.

ஒருநாள் நடு ராத்திரிமுதல் மறுநாள் நடு ராத்திரி மட்டுமுள்ள காலம் ஒருநாள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஒருநாளை அங்கிலேயர் இருபத்துநாலு மணியாக வகுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு மணிநேரமும் அறுபது நிமிஷங்களாகவும், ஒவ்வொரு நிமிஷமும் அறுபது விநாடிகளாகவும் வருக்கப்பட்டிருக்கிறது. கைந்நொடிப்பொழுதே ஒரு விநாடி நேரம்.

இந்த தேசத்தார் ஒருநாளை எட்டு சாமங்களாகவும், அறுபது நாழிகையாகவும் வகுத்திருக்கிறார்கள். இந்துக்களின் இரண்டரை நாழிகைப்பொழுது அங்கிலேயருடைய ஒருமணி நேரத்துக்குச் சரி.

ஏழு தினங்கள் மொத்தமாய் வாரம் என்று சொல்லப் படுகிறது; அவ்வேழு தினங்களும்: ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி என்று

சொல்லப்படுகின்றன. சுமார் நாலு வாரங்களை மொத்தமாய் மாதம் என்று சொல்லுகிறோம். ஐம்பத்திரண்டு வாரங்கள் அல்லது 365 நாட்கள் ஒரு வருஷகாலம். ஒரு வருஷத்தில் பன்னிரண்டு மாதங்களுண்டு: அவைகள் ஜனுவரி, பெப்பரவரி, மார்ச்சு, ஏப்பிரல், மே, ஜூன், ஜூலாய், ஆகஸ்ற்று, செப்ற்றெம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் என்று சொல்லப்படுகின்றன. நம்முடைய தேசத்தாரோ அம்மாதங்களை: தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி என்று சொல்லுகிறார்கள்.

25. சிறுபிள்ளையும் கிளிப்பிள்ளையும். ௨௫.

கரங்கள் .... கைகள்.
பக்கத்தில் .... சமீபத்தில், கிட்ட.
தண்டு .... தடி, குச்சு.
பழக்குதல் .... கற்றுக்கொடுத்தல்.
பொருள் .... கருத்து.

ஒரு சிறுபெண் வாசிக்கிறாற்போல் காட்டுகிற படத்தை என்முன் பார்க்கிறேன். அவள் தன் இருகரங்

களாலும் புஸ்தகத்தைப் பிடித்திருக்கிறாள். அவளுடைய பக்கத்தில் ஒரு கிளிப்பிள்ளை ஒரு தண்டின்மேல் உட்கார்ந்திருக்கிறது. சிலஜாதி கிளிகளைப் பேசப் பழக்குவிக்கலாம். ஆனால் வாசிக்கப் பழக்கலாமோ? பழக்கக் கூடாது. புருஷரும், ஸ்திரீகளும், பிள்ளைகளும்மாத்திரம் வாசிக்கப் பழக்கலாம்.

கற்றுக்கொடுத்த வார்த்தைகளைமாத்திரம் கிளிகள் சொல்லும், சொல்லும் வார்த்தைகளின் பொருளோ தெரியாது. “சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை” என்று ஒரு பழமொழியும் வழங்கிவருகிறது. யார் சிலவேளை கிளிப்பிள்ளைகளைப்போலிருக்கிறார்கள் என்று தெரியுமா? படிப்பதின் பொருளை அறிந்துகொள்ளாத பிள்ளைகள் கிளிப்பிள்ளைகளுக்குச் சமம். ஆகையால் நீ எதைப் படித்தாலும் அதின் பொருளை அறிந்துகொள்ளும்படியாகப் பிரயாசப்படு; பொருளை அறியாமல் படித்தால் உன்னுடைய படிப்பைக் கிளிப்பிள்ளைப்படிப்பு என்றுதான் பிறர் சொல்லுவார்கள்.

26. குள்ளநரியும் பழக்குலையும். ௨௬

அங்கு	அவ்விடத்தில்.
நாடினது	ஆசைப்பட்டது.
கிட்டிற்று	கிடைத்தது.
மனமகிழ்ந்து	மனதில் சந்தோஷப்பட்டு.
கண்ணுக்கெட்டின	கண்ணால் பார்க்கிற.
வாய்க்கெட்டினால்	வாய்க்குள்ளே போனால்.
திரா அபேட்சை	நீங்காத ஆசை.
எட்டாப்பழம்	எட்டமாட்டாத பழம்.
கொட்டாவி	வாயை ஆவென்று திறத்தல்.
நாடாது	விரும்பாது.
பழித்து	குறைவாய்.
பிரீதி	பிரியம், ஆசை.

ஒரு குள்ளநரி பசியினாலும் தாகத்தினாலும் வருந்தி, ஒரு முந்திரிகைத்தோட்டத்திற்கு வந்து, அங்கு தொங்

இன ஒரு பழக்குலையைக் கண்டு: ஆகா தேடினது அகப்பட்டது, நாடினது கிட்டிற்று என்று மனமகிழ்ந்து, சற்றுநேரம் அக்குலையின்கீழ் உட்கார்ந்து ஏறிட்டுப்பார்த்து: கண்ணுக்கெட்டின இப்பழங்கள் வாய்க்கெட்டி

னுல் அல்லோ என் ஆசை தீரும் பசி ஆறும் என்று தீரா அபேட்சையால் அக்குலையைக் கௌவும்படித் தன்னுல் ஆனமட்டும் குதித்துக் குதித்துப் பார்த்தன. 'எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விட்டாவதென்ன?' குள்ளநரி அங்கும் இங்கும் சாடி எவ்வளவு உயரமாய்க் குதித்தாலும் பழம் எட்டவில்லை. எட்டாத பொருள் முட்டினுல் கிட்டுமா? கிட்டாதே. அப்புறம் அந்த நரி, தன் பிரயாசத்தால் பலனில்லை என்று கண்டு, சீச்சீ நமக்கு இது வேண்டாம், யாருக்கு வேண்டுமோ அவர்களே பறித்துத் தின்னட்டும், இந்த புளிப்புப்பழத்தை நாய்கூட நாடாது என்று பழித்துப்பேசினது.

சில மனுஷர் தங்களுக்குப் பிரீதியான ஒரு பொருள் கிடைக்கும்படிப் பிரயாசப்பட்டும் அப்பொருள் கிட்டாவிட்டால் இந்தக் குள்ளநரியைப்போல அதைக்

குறித்துக் குறைசொல்லுகிறார்கள். அது சரியான காரியம் அல்ல.



27. நாய். உஎ.

பழகி .... அறிமுகமாகி, சிநேகமாகி.
திருடர் .... கள்ளர்.
துஷ்டர் .... போக்கிரிகள்.
அயலார் .... அந்நியர், வேற்றுமனுஷர்.
சமாசாரம் .... விசேஷம், செய்தி.
பிராணபாயம் .... உயிர்ச்சேதம், சாவு.
பாசமுள்ள .... பற்றுள்ள.

வீட்டில் நின்று வளர்ந்து பழகிக்கொள்ளும் மிருகங்களில் நாய் ஒன்று. தன் சொந்தக்காரனுடைய வீட்டுக்குத் திருடராவது, துஷ்டராவது வாராதபடி அது காவல் காக்கும். அதற்கு நம்மைப்போல பேசத் தெரியாது, ஆதலால் திருடராவது, அயலாராவது வந்தால், பேசுகிறதற்குப் பதிலாகக் குலைக்கும்; குலைக்கிறபொழுது, வீட்டுக்கு வந்தவனைப்பார்த்து: நீ யார்? எங்கே வந்தாய்? என்ன சமாசாரம்? என்று கேட்கிறதாகவும், தன் எஜமானைக் கூப்பிட்டு:—ஐயா, வெளியே வாரும், இது யாரென்று பாரும் என்று அறிவிக்கிறதுபோலும் இருக்கிறது.

நாய்க்கு அறிவுண்டு, பழகின ஆட்களைக் கண்டால் அது சந்தோஷத்தால் அந்த ஆளைச் சுற்றிலும் குதித்து ஓடும். நீ வைத்திருக்கும் பலகாரம் அதற்கு வேண்டுமாகில் உன்னைக் கேட்கவும் அதற்குத் தெரியும். அந்தப் பலகாரத்தையும் உன் முகத்தையும் எட்டி எட்டிப் பார்த்து, வாலை ஆட்டிக்கொண்டு உன் காலண்டை வரும்.

அநேக நாய்கள் தங்கள் எஜமான்களை பிராணபாயத்திலிருந்தும் இரட்சித்திருக்கிறது. நாய் பாசமும் உண்மையுமுள்ள மிருகம், அதைப் பட்சமாய் நடத்துவது நலம்.

28. ஆதித்தாய் தந்தை. உ-அ.

பாக்கியம் .... மனச்சந்தோஷம், வாழ்வு.
செழிப்பான .... நீரூற்றுள்ள, வளம்பொருந்திய.
தலைமறைவாய் .... ஒளித்து.
பரிசுத்தம் .... பாவமில்லாத குணம்.

தேவன் சிருஷ்டித்த முதல் மனுஷனுக்கு ஆதாம் என்று பேர். ஆதாம் மண்ணினால் உண்டாக்கப்பட்டான். தேவன் ஆதாமைப் படைத்தபோது அவன் பாவகுணம் இல்லாதவனாயும் பாக்கியம் உள்ளவனாயும் இருந்தான். அப்புறம் தேவன் முதல் மனுஷியை உண்டாக்கினார், அவளுக்கு ஏவாள் என்று பேர். அவ்

விருவரையும் தேவன் ஒரு செழிப்பான தோட்டத்தில் குடியிருக்கும்படி செய்தார்.

நம்முடைய ஆதித்தாயும் தந்தையும் தேவன் சொன்னபடி நடந்துகொள்ளவில்லை. தேவகட்டளையை மீறினதுமுதல் அவர்கள் அவருக்கு பயப்படவும், தலைமறைவாய்த் திரியவும் பிரயாசப்பட்டார்கள். அப்புறம் தேவன்: நீங்கள் சாவீர்கள் என்று சொல்லி, தோட்டத்திலிருந்து அவர்களை அனுப்பிவிட்டார்.

தேவகட்டளையை மீறினதுமுதல் ஆதாமும் ஏவாளும், முன்போல பரிசுத்தமும், பாக்கியமுமாயிருக்கவில்லை; அவர்கள் பாவிகளானார்கள், அவர்கள் பெற்ற பிள்ளைகளும் பாவகுணமுள்ளவர்களாகவே இருந்தார்கள். ''தாயைப்போலே பிள்ளை நூலைப்போலே சேலை'' என்று ஒரு பழமொழியும் உண்டே.

29. கழுகும் குழந்தையும். உகூ.

மாதா ... . தாயார்.
முற்றம் .... வீட்டுவாசலன்டையுள்ள பூமி.
அக்ஷணமே .... அந்தநேரமே.
உராஞ்சி .... வேகமாய்ப் பறந்துவந்து.

ஆகாயத்தில்	மேலே, அந்தரத்தில்.
கலக்கம்	பயம், அச்சம்.
சிகரம்	உச்சி, நுனி.
தீவிரமாய்	சீக்கிரமாய்.
நால்வர்	நாலு ஆட்கள்.
ஆனந்தம்	சந்துஷ்டி.
பறிகொடுத்த	இழந்துபோன.
அளவிருக்குமா?	எல்லையுண்டா?

ஒருநாள் ஒரு மாதா தன் பாலகனுக்குப் பாலூட்டி அதை வீட்டுமுற்றத்தில் கிடத்திவிட்டு ஏதோ வேலையாய்ப்போனாள், அக்ஷணமே ஒருகழுகு உராஞ்சிவந்து, காலையும் கையையும் ஆட்டி விளையாடிக்கொண்டிருந்த பிள்ளையை அடித்துக்கொண்டுபோய்விட்டது. கழுகின் வாயில் அகப்பட்டு, ஆகாயத்திலிருக்கும்போது அக்குழந்தைக்கு எவ்வளவு கலக்கமிருக்கும்? ஐயோ! கழுகு அந்தப் பாலகனை மலைச்சிகரத்திலிருந்த தன் கூண்டுக்குக் கொண்டுபோய்விட்டது.

அந்தக் குழந்தையைக் கழுகு கொத்தி அதின் சதையைப் பீறிக் காயப்படுத்திற்றோ? இல்லை, இல்லை. கழுகின் கூட்டை அறிந்திருந்த நாலுபேர் தீவிரமாய் அந்த மலைச்சிகரத்திலேறி கூட்டிலிருந்த குழந்தையை எடுத்துவந்தார்கள். அந்தப் பிள்ளைக்கு யாதொரு காயமும் இருக்கவில்லை. அந்த நால்வரும் குழந்தையை உயிரோடு கண்டு ஆனந்தங்கொண்டிருப்பார்கள் அல்லவா? தன் பிள்ளையைப் பறிகொடுத்த தாய் அதை மறுபடியும் சுகத்தோடு பெற்றுக்கொண்டு மார்போடு அணைத்து முத்தமிட்டபோது அவளுக்கிருந்த சந்தோஷத்துக்கு ஒரு அளவிருக்குமா?

30. கண். ௩௰.

பலகணி .... ஜன்னல், சிறுவாசல்.
சமானம் .... மாதிரி, போல.
பிரமாண்டமான .... அதிகப்பெரிதான.
உருவங்களை .... பொருட்களை.
கூசும்படி .... கண்ணால் பார்க்கக்கூடாதபடி.
சுடர் ... . பிரகாசம், வெளிச்சம்.
ஊனப்படுத்தாத .... சேதப்படுத்தாத, கெடுக்காத.
கபோதிகள் .... குருடர்.
அக்ஷரங்கள் .... எழுத்துகள்.

ஒரு வீட்டிலுள்ள பலகணிவாசலுக்குச் சமானமாய் நம்முடைய கண்கள் சரீரத்துக்கு இருக்கின்றன. அது சிறிய உறுப்பாயிருந்தும் பிரமாண்டமான உருவங்களையும் பார்க்கும். முகத்திலுள்ள ஒரு சிறு குழிக்குள்ளே கண் பதிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழி எப்பக்கத்திலும் எலும்பினாலும், வில்வளைவாய் முளைத்திருக்கும் மயிராலும் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. வில்வளைவான மயிருக்குப் புருவம் என்று பேர். கண்மடல் மெல்லியதோலால் செய்யப்பட்ட ஒரு சிறு மூடிபோலிருக்கிறது. கண்ணுக்குள் தூசியாவது, கூச்சமுண்டாக்கும் சுடராவது சென்று அதை ஊனப்படுத்தாதபடி கண்மடல் கண்மணியை மூடிக்கொள்ளுகிறது. கண்மடலின் ஓரத்தில் முளைத்திருக்கும் மயிர் இமை என்னப்படும்; கண்ணுக்குள் விழுந்துவிட்ட தூசிகளை அது மெதுவாய் ஒதுக்கி வெளியே தள்ளுகிறது.

பார்வை நமக்கொரு பெரிய பாக்கியமாயிருக்கிறது. கண்தெரியாதவர்கள் கபோதிகள் என்னப்படுகிறார்கள். கண்ணில்லாக் கபோதிகளுக்கு நாம் தயவுகாட்டவேண்டும். கபோதிகளும் வாசிக்கும்படி பழகுகிறார்கள். அவர்களுக்குப் படிப்பிக்கும் அக்ஷரங்கள் மேடு திரட்டினாற்போல் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த அக்ஷரங்களை அவர்கள் தங்களுடைய விரல்களால் தடவிக்கொண்டு வாசிக்கிறார்கள்.

31. சத்தியத்தைப் பேசு. ௩௧.

அசத்தியம் .... பொய்.
அடாத .... செய்யத்தகாத.
உள்ளதை .... நிசமானதை.
அக்கினி .... நெருப்பு.

எல்லாப் பிள்ளைகளும் பெண்களும் பலதரம் குற்றத்தில் அகப்படுகிறதுண்டு; அந்தக் குற்றத்தைக்குறித்து விசாரணைசெய்தால் சிலர் சத்தியத்தையும் சிலர் அசத்தியத்தையும் பேசுகிறார்கள்.

ஒரு பையன் அடாத காரியத்தைச் செய்து குற்றவாளியானால் அவன் செய்யவேண்டியதென்ன? தான் செய்த தப்பிதத்தை மறைக்கும்படிப் பார்க்கலாமா?— மறைக்கக்கூடாது; அவன் உடனே உள்ளதைச் சொல்லித் தன் குற்றத்தை ஒத்துக்கொள்ளுகிறதே நலமானது. அப்போதுதான், இந்தப் பையன் உள்ளதை ஒளிக்கிறவன் அல்ல என்று எல்லாரும் அறிந்துகொண்டு அவனுடைய வார்த்தையை நம்புவார்கள்.

உள்ளகாரியத்தை மறைக்கிறது மகா கெடுதி. உள்ளதை எப்படி ஒளித்தாலும் சில காலத்துக்குள் வெளிக்கு வந்துவிடும். “கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளில்

தெரியும்" என்று ஒரு பழமொழியும் இருக்கிறது. சத்தியத்தைப் பேசுவதோ கடவுளுக்கு மகா பிரீதி. நியாயமானபிரகாரமாய்த் தங்கள் காரியங்களை நடப்பிக்கிறவர்கள்மேல் தேவன் பிரியப்படுகிறார்; ஆனால் பொய்யர் எல்லாரும் அக்கினிக்கடல் என்று சொல்லப்படுகிற நாகத்தில் பங்கடைவார்கள்.

32. காகமும் அன்னமும். ௩௨.

வெண்ணிறம்	வெள்ளைநிறம்.
காகக்கூட்டம்	காகங்களின் கும்பு.
முழுகி	ஸ்நானம்செய்து.
கருமேனி	கறுப்புநிற உடம்பு.
சலித்தும்	மனம்வெறுத்தும்.
முக்காலும்	மூன்றுதரம்.
பிரயத்தனம்	முயற்சி.
ஸ்திதி	நிலைமை, அந்தஸ்து.
மனத்திர்ப்தி	மொறுமொறுப்பில்லாத குணம்.
நியமிக்காத	தீர்மானிக்காத.
தகுதியல்ல	சரியல்ல.

புத்தியீனமுள்ள ஒரு காகம் அன்னப்பட்சியைப் போல வெண்ணிறமாகும்படி ஆசைகொண்டு காகக் கூட்டத்தை விட்டுப்போட்டு ஒரு குளக்கரையில் வந்து வாசம்செய்தது. அது அனுதினமும் அக்குளத்து ஜலத்

தில் முழுகி தன் கருமேனி வெண்மேனியாகும்படிப் பிரயாசப்பட்டு, சலித்துப்போயிற்று.

ஒரு மாதகாலமாய்க் காகம் குளித்து முழுகியும் அதின் மேனி பழையபடி கறுப்பாகவே இருந்தது. "முக்காலும் காகம் முழுகிக் குளித்தாலும் கொக்காகுமா?" தான் வெண்ணிறமாகவேண்டுமென்று அல்லும் பகலும் குளக்கரையை விட்டுப் பிரியாதபடியினால், போதுமான இரை அகப்படாமல் வரவர மெலிந்து கடைசியாக செத்துப்போயிற்று.

காகம் ஜலத்தில் அல்ல பாலில் முழுகினபோதிலும் அதின் கருநிறம் மாறுமா? — மாறாது. நம்முடைய பாவச்சுபாவங்கள் மாறும்படி, நாம் என்ன பிரயத்தனம்செய்தாலும் முடியாது. தேவன் நம்மை எந்த ஸ்திதியில் வைத்திருக்கிறாரோ, அந்த ஸ்திதியில் மனத்திர்ப்தியோடு இருக்கவேண்டியது. அவர் நமக்கு நியமிக்காத ஸ்திதியை நாம் விரும்பி, அதற்கென்று முயற்சி செய்வது தகுதியல்ல.

33. பெட்டைக்கோழி. ௩௩.

அணைத்து	கவிந்து, சேர்த்து.
செட்டை	சிறகு.
அடைந்து	ஒதுங்கி, மறைந்து.
கெக்கரிக்கும்	சத்தமிடும்.
பொறுக்கி	ஒவ்வொன்றாய்க் கொத்தி.
தொனியை	சத்தத்தை, குரலை.

பெட்டைக்கோழி முட்டையிட்டு, குஞ்சுபொரிக்கும்; குஞ்சுபொரிக்கும்படி அது முட்டைகளின்மேல் படுத்து நாள்முழுதும் அவைகளை அணைத்துக்கொண்டிருக்கும். இதை அடைகாக்கிறது என்று சொல்லுகிறார்கள். முட்டைகளிலிருந்து குஞ்சுகள் புறப்பட

மட்டும் பெட்டை பொறுமையோடே அடைகாக்கும். குஞ்சுபொரிக்கிற காலத்தில் முட்டைக்குள்ளிருக்கும் குஞ்சுகள் வெளியே புறப்படும்படி அசைவதால் தோடு

கள் உடைந்து ஒவ்வொன்றாய் வெளிப்படும். குஞ்சுகள் அங்குமிங்கும் ஓடித்திரிந்தாலும் அடிக்கடி தாயண்டைபோய் அதின் செட்டைகளுக்குள் அடைந்துகொள்ளும். எங்கேயாவது கொஞ்சம் இரை கிடந்தால் தாய்க்கோழி தன் கால்களால் கிண்டி ஒரு மாதிரியாய் கெக்கரிக்கும்; இந்தச் சத்தம் கேட்டவுடன் குஞ்சுகள் ஓடிப்போய் இரைகளைப் பொறுக்கித் தின்னும். பருந்தாவது, காகமாவது வந்தால் தாய்க்கோழி வேறொரு மாதிரியாய்க் கெக்கரிக்கும்; அந்த தொனியைக் கேட்டவுடன் ஓடி தாயின் சிறகுகளுக்குள் ஒளித்துக்கொள்ளும்.

எல்லாப் பிள்ளைகளும், பெண்களும், இந்தக் கோழிக் குஞ்சுகளைப்போல, தங்கள் தாயாருக்கும் தகப்பனுக்கும் கீழ்ப்படிந்து நடந்தால் மிகவும் நன்மையாய் இருக்கும்.

34. எது பாவம்? ந. ச.

என்னென்ன .... எவைகளை.
வேதம் .... தேவனைக்குறித்துச் சொல்லும் புஸ்தகம்.
இடங்கொடுக்க ...... இணங்க, சம்மதிக்க.
ஏமாற்றுவது .... மோசம்செய்தல்.
சேவியாமல் .... கும்பிடாமல்.
சமஸ்த .... எல்லா, சர்வ.

மனுஷர் இரண்டுவகையாய்ப் பாவஞ்செய்துவருகிறார்கள். அவ்விருவகையுமென்ன? முதலாவது தீமையானதைச் செய்கிறதினாலேயும், இரண்டாவது நன்மையானதைச் செய்யாததினாலேயுந்தான். இவ்விரண்டும் பாவம் என்பது நிசம். நாம் என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளை தேவன் தமது பரிசுத்த வேதத்தில் கட்டளையிட்டிருக்கிறார். அக்கட்டளையின்படி நடந்துவர நாம் கவலைப்படாவிட்டால் பாவம் செய்கிறோம். நாம் பாவத்திற்கு இடங்கொடுக்கலாகாது. "பாவத்திற்கு இடங்கொடாதவன் பாவத்தை ஜெயங்கொள்ளுவான்" என்று ஒரு பழமொழியுமுண்டு.

பாவங்களில் பலமாதிரியுண்டு; பொய் சொல்லுவதும், தூஷணம் பேசுவதும், சண்டைபோடுவதும், ஏமாற்றுவதும், திருடுவதும் பாவம். ஏழைக்கு இரங்காமலும், அவதிப்படுகிறவனுக்கு உதவிசெய்யாமலும், கடவுளைச் சேவியாமலும் இருந்தால் அது பாவம். நாம் பேசுகிறதையும், செய்கிறதையும் தேவன் அறிகிறது போலவே, நம்முடைய எண்ணங்களையும் அறிகிறார். நாம் ஒரு தீமையைச் செய்யும்படி நினைத்தாலும் அது பாவந்தான், அதையும் தேவன் அறிவார்.

சமஸ்த ஜனங்களும் பாவிகள் என்று சத்தியவேதம் அறிவிக்கிறது.

35. இரண்டு நாய்களின் கதை. ௩௫.

பொழுதுசாயும் வேளை	சாயந்தரம்.
கிராமம்	சிறு ஊர்.
கும்பலாய்	கூட்டமாய்.
அயலூர்	அடுத்த ஊர்.
சாடினது	போய்விழுந்தது.
ஏகமனமாகி	ஒரேமனமாகி, ஒன்றுபோல.
பிராணன்	ஜீவன், உயிர்.

கோபி என்றும், சோபி என்றும் பேருள்ள இரண்டு நாய்கள் ஒன்றாய்க் கூடி ஒருநாள் பொழுதுசாயும் வேளையில் உலாவப்போயின. அவைகளில் சோபி அமைதலுள்ளது, ஆனால் கோபியோ துடுக்கானகடிநாய். உலாவப்போன நாய்கள் இரண்டும் ஒரு கிராமத்தில் சேர்ந்தன; அப்பொழுது அவ்வூர் நாய்களெல்லாம் ஒவ்வொன்றாய் குலைத்துக்கொண்டு ஒரு கும்பலாய்க் கூடின. அயலூர் நாய்களின் கூட்டத்தைக் கண்ட சோபி வாலை மடக்கி, உடலைக் குறுக்கி தன்னுடைய அமைந்த குணத்தைக் காட்டினது. ஆனால் கோபி என்னும் நாயோ வாலை முறுக்கி, தரையைப் பறண்டி உறுமிக்கொண்டு அந்த நாய்களில் ஒன்றைக் கடிக்கும்படி சாடினது. உடனே அயலூர் நாய்களெல்லாம் ஏகமனமாகி, மூர்க்கத்தோடு அதின்மேல் விழுந்து, அதைக் கடித்து உதறிக் கொன்றுபோட்டது. அப்புறம் அவை சோபி என்னும் நாயையும் தொடர்ந்து பீறி அதையும் கொன்றது. சோபி அமைதலுள்ள நாயாய் இருந்தாலும், துஷ்டகுணமுள்ள கோபியுடன் கூடினதால் தன் ஜீவனை இழந்துவிடலாயிற்று.

நாம் துஷ்டப்பிள்ளைகளோடும், பெண்களோடும் கூடிக்கொண்டு திரியலாகாது; துஷ்டரோடு கூடினால் அவர்களுக்கு வருகிற துன்பம் நம்மையும் தொடரும். துஷ்டர் நேசம் பிராண நஷ்டம்.

36. வாழைமரம். ந.கா.

கண்டங்கள் .... பூமியின் பெரிய பிரிவுகள், துண்டுகள்.
உஷ்ணதேசம் ...... காங்கையான ஊர்.
அடுக்கடுக்காய் .... ஒன்றின்மேலொன்றாய்.
கன்று .... வாழைக்கன்று, சிறுவாழை.
கூழ் .... சேறுபோன்ற சோறு.
அமுதிட்டு .... சோறுபோட்டு.
திரிக்கலாம் ...... முறுக்கலாம்.

ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா என்னும் கண்டங்களிலுள்ள உஷ்ணதேசங்களில் வாழை மிச்சமாய் உண்டு. இதுவரையும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் செடிகள் எல்லாவற்றிலும் வாழையின் இலையே நீளமும் அகலமுமாய் இருக்கிறது. அந்த இலைகள் ஒவ்வொன்றும் அடியிலிருந்து கிளம்புகிற நீண்ட பட்டைகளின் நுனியில் அகன்று நிற்கிறது. அந்த வாழைப் பட்டைகள் அடுக்கடுக்காய் மூடி வளருகின்றன. அவைகளே வாழைமரம் என்னப்படுகிறது. வாழையின் குலை பெரிதாயும், அதின் காய்கள் சீப்புச் சீப்பாயும் இருக்கும். வாழையைப்போல அதிகக் கனிகொடுக்கும் செடி வேறொன்றில்லை. வாழையின் கீழ்க்கன்றே பின்பு மரமாகும்.

இத்தேசத்தில் வாழைக்காயையும் தண்டையும் கறி சமைப்பார்கள். பழத்தைப் பிரியமாய்ச் சாப்பிடுகிறார்கள். அமெரிக்காவிலுள்ள சில ஊராருக்கு வாழைக்காயே விசேஷித்த போஜனம்; அவர்கள் அதை வேக வைத்துக் காயப்போட்டு, காய்ந்தபின்பு மாவாக இடித்துக் கூழ்செய்து சாப்பிடுவார்கள். வாழைஇலையில் அமுதிட்டு உண்ணலாம். வாழைநாரால் நேர்த்தியான கயிறு திரிக்கலாம்.



37. கழுதையும் கோவேறுகழுதையும். ௩௭.

பொதி .... மூட்டை, பாரம்.
நதியை .... ஆற்றை.
தற்செயலாய் ...... தன்னை அறியாமல்.
சற்றுதூரம் .... கொஞ்சதூரம்.
செல்லவே .... போகவே, நடக்கவே.
பதின்மடங்கு .. ... பத்துப்பங்கு அதிகம்.
சக்தியற்று .... பலமில்லாமல்.

உப்புப்பொதி ஏற்றியிருந்த ஒரு கழுதையும், ஆட்டுமயிரால் செய்யப்பட்ட கம்பளிப்பொதி ஏற்றியிருந்த ஒரு கோவேறுகழுதையும் ஓர் நதியைக் கடக்க நேரிட்டது. நதியைக் கடக்கையில் கழுதையின் பொதி எப்படியோ தற்செயலாய் நனைந்துபோயிற்று. உப்புப் பொதியில் ஜலமேறினால் என்ன ஆகும்!- உப்புக் கரையுமல்லவா? உப்புக் கரைந்ததால் அப்பொதியின் பாரம் குறைந்துபோயிற்று. நதியைக் கடந்தபின், கழுதை கோவேறுகழுதையைப் பார்த்து:—அண்ணா, அண்ணா! என் பொதி நனைந்துபோயிற்று, நனைந்ததுமுதல் பொதி அவ்வளவு பாரமில்லை என்று சொன்னது. அதைக்

கேட்ட கோவேறுகழுதை: — அப்படியா தம்பி! என்று சொல்லிவிட்டு இனி வழியில் தண்ணீரைக் கடக்கும்படி நேரிட்டால் நாம் நமது பொதியோடு ஜலத்தில் படுத்துப் பொதியை நனைத்துக்கொள்ளவேண் டுமென்று தீர்மானித்துக்கொண்டது. இந்தத் தீர்மா னத்தோடு சற்றுதூரம் செல்லவே வழியில் ஒரு குள மிருந்தது. அக்குளத்துள் கொஞ்சதூரம் போனவுடன் கோவேறு கழுதை கம்பளிப்பொதியோடு படுத்துக் கொண்டது. கம்பளி முழுவதிலும் தண்ணீர் ஏறினதால் பொதியின் பாரம் முன்னிலும் பதின்மடங்கு பளுவா னது, அதைச் சுமந்துபோக சக்தியற்று இடுப்பு ஒடிந்து மாண்டது.

ஒருவனுடைய சகாயத்துக்கு உதவியாய் இருக்கும் காரியமே, இன்னொருவனுடைய சாவுக்கு வழியாய் இருக்கலாம் என்று இந்தக் கதை நன்றாய்க் காட்டுகிறது.

38. பொன்காசு. ந. அ.

அதிஷ்டம் .... லாபம், வாழ்வு.
இனும் .... வெகுமானம்.
வருவார் .... தனக்கு எதிரே வருகிறவர்கள்.
போவார் .... தனக்குப் பின்னாலிருந்து வருகிறவர்கள்.
தென்பட்டால் ... அகப்பட்டால்.
அபகரித்து .... நியாயமில்லாமல் சொந்தமாக எடுத்து.
திரவிசாரித்து ...... திட்டமாய், நன்றாய் விசாரித்து.

ஒருதரம் ஒரு பையன் தன் வழியே போகையில் ஒரு பொன்காசைக் கண்டெடுத்து: "ஆகா! நமக்கு அதிஷ்டம் வந்தது, நாம் எடுத்ததை ஒருவரும் காண வில்லை. நல்ல இனும் கிடைத்தது" என்று சொல் லித் தன் பைக்குள் போட்டுக்கொண்டான். சற்று நேரத்துக்குப்பின்பு அவன் பாடசாலையில் மனப்பாட

மாகப் படித்த சத்தியவேத வசனம் ஒன்று ஞாபகத்தில் வந்தது. அந்த வாசகம் என்னவென்று கேட்பாயோ?

"நீர் என்னைப் பார்க்கிற தேவன்"

என்பதுதான். அப்புறம் அவன், அவ்வழியே வருவார் போவாரிடத்தில் இந்தப் பொன்காசு உம்முடையதா? உம்முடையதா? என்று விசாரித்தான். விசாரித்தபோது: தன்னுடைய வீட்டு வாடகையைச் செலுத்தப்போன ஒரு ஏழைமனுஷன் மடியிலிருந்து அந்தக் காசு தவறி விழுந்திருக்கிறது என்று தெரியவந்தது. நமக்கு வழியில் யாதாமோர் பொருள் தென்பட்டால், அப்பொருள் யாருடையதென்று விசாரிக்கவேண்டும். நீ ஒரு ரூபாயைத் தெரியாமல் போட்டுவிட்டால் அதைக் கண்டவனே எடுத்துக்கொள்ளட்டும் என்று சொல்லுவாயா? சொல்லமாட்டாயே. கண்டெடுத்த பணத்தை நாமே அபகரித்துக்கொள்ளுகிறது அதைத் திருடுகிறதற்குச் சரி. அது யாருடையதென்று தீர விசாரித்துக் கொடுத்துவிடுகிறது மெத்த நல்லது.

39. ஆந்தை. ௩௯.

அலகோ	மூக்கோ.
தடித்து	கெட்டியாகி, பலமாய்.
மங்கலாய்	மறைவாய்.
மாலைமயங்கினவுடனே ...	பொழுது அடைந்தவுடனே.
நிர்மூலம்	சேதம், நாசம்.
கெவுளி	பல்லி.

ஆந்தையானது பட்சிசாதிகளில் ஒன்று. அதின் கண்கள் பெரிதும் உருண்டையுமாயிருக்கும். அலகோ தடித்துக் குட்டையாய் இருக்கும். பகற்காலத்தில் ஆந்தைக்குக் கண் மங்கலாய்த் தெரிந்தாலும், மாலை மயங்கினவுடனே தெளிவாய்த் தெரியும்; அப்பொழுது

தான் அது இரைதேடப் போகும். ஆந்தை பறக்கும் போது புறாவைப்போல் செட்டைகளை படபட, என்று அடிக்கும், சத்தம் கேளாது. எலி, வௌவால், தவளை

இவைகளே அதின் இரை. வீட்டெலிகளை பூனை நிர்மூலம்பண்ணுவதுபோல, வயல்நிலங்களிலுள்ள காட்டெலிகளை ஆந்தை நிர்மூலம்பண்ணும். ஆகையால் அது பிரயோசனமுள்ள பட்சிதான். நம்முடைய தேசத்தார் ஆந்தையாவது கெவுளியாவது கத்தக் கேட்டால் ஏதோ ஆபத்து கிட்டிற்று என்று நினைத்து பயப்படுகிறார்கள். அது தப்பான நினைவு.

இடிந்துபோன மாளிகைகளில் ஆந்தைகளைப் பெரும்பாலும் காணலாம். ஆகையால் ஆந்தை அழிவின் அடையாளமாக எண்ணப்படுகிறது. ஒரு பெரிய நகரம் பாழாவதைக்குறித்து: ஆந்தைகள் அங்கே தாபரிக்கும் என்று முன் அறிவிக்கப்பட்டது.

40. லோக ரட்சகர். சமி.

குமாரன் .... மகன்.
பாலன் .... குழந்தை.
அற்புதம் ...... { மனுஷவல்லமைக்கு மிஞ்சின செய்கை.
நோயாளிகள் ...... வியாதியஸ்தர்.

மீட்கும்படி .... இரட்சிக்கும்படி.
வாகனம் .... ரதம், வண்டி.
சந்தித்து .... பார்த்து, கண்டு.
என்றென்றைக்கும் ... முடிவில்லாதகாலமாய்.

தேவன் தம்முடைய குமாரனை பூலோகத்துக்கு அனுப்பி, மானிடருக்காக மரணமடையச் செய்வேன் என்று ஆதிமனுஷராகிய ஆதாமுக்கும் ஏவாளுக்கும் சொன்னார். தேவகுமாரன் ஒரு பாலனாய்ப் பிறந்து இயேசு என்று பேர்பெற்றார். இயேசு என்னும் பேருக்கு இரட்சகர் என்று அர்த்தம்.

இயேசு பெரிய ஆளானபோது பல ஊர்களுக்கும் போய்ப் பிரசங்கம் செய்து, அநேக அற்புதங்களையும் செய்தார். அவர் குருடருக்குப் பார்வையையும், செத்துப்போனவர்களுக்கு உயிரையும் கொடுத்தார். அவரிடத்தில் வந்த நோயாளிகள் எல்லாரையும் சுகமாக்கினார்.

நம்முடைய ஆத்துமாவை நரகதண்டனையிலிருந்து மீட்கும்படி இயேசு சிலுவைமரத்தில் மரணமடைந்தார். அவர் அடக்கம் பண்ணப்பட்டாலும், மறுபடியும் மூன்றும் நாளில் உயிரோடெழுந்திருந்து அப்புறம் மேகவாகனம் ஏறி, பரமண்டலம் சென்றார். இப்பொழுது அவர் அங்கேதான் இருக்கிறார். நாம் அவரை நேசித்து, அவர் கட்டளையின்படி நடந்துவந்தால், ஒரு காலத்தில் அவரைப் பரமண்டலத்தில் சந்தித்து, அவரோடுகூட என்றென்றைக்கும் பாக்கியராய் வாழுவோம்.



41. விழுந்துபோன குருவிக்கூடு. ௪௧.

ஜோடு .... இரண்டு.
உலுக்கும்படி .... அசைக்கும்படி, குலுக்கும்படி.
துயரப்பட்டு .... விசனப்பட்டு.
நெடுநேரம் .... அதிகநேரம்.
துயரக்குரல் .... துக்கமான சத்தம்.
தங்க .... உட்கார, இருக்க.
தாபரிக்க .... குடியிருக்க.
பின்தாங்க .... மனமில்லாதிருக்க.

புளியமரத்தின் கிளைகள் ஒன்றில் ஒருதரம் ஒரு ஜோடுதூக்கணாங்குருவி கூடுகட்டி, அக்கூட்டை மின்மினி பூச்சியால் விளக்கேற்றிக்கொண்டிருந்தது. புளி பழுத்திருந்த காலத்தில், அதில் ஏறிப் பழம் உலுக்கும்படி போன ஒரு பையன் அந்தக் கூட்டை இழுத்து, ஏழைக் குருவிகளின் குடியிருப்பைக் கெடுத்துப் போட்டான். அச்சமயத்தில் இரைதேடப்போயிருந்த ஆணும் பெண்ணும், தங்கள் வீடு அழிந்துபோனதைக் கண்டு துயரப்பட்டு, உரத்த சத்தமாய் நெடுநேரம் கதறி அங்குமிங்கும் பறந்துகொண்டிருந்தன. அந்தக் குருவிகளின் துயரக்குரலை மற்ற தூக்கணாங்குருவிகள் கேட்டு: ஐயோ, நம் இனத்தார் தங்க இடமற்றும், தாப

ரிக்க வீடற்றும் ஆகாயத்தில் அலேகிறுர்களே என்று சொல்லி ஏகமாய்க் கூடி ஒரு புதுக்கூடு பின்னிக்கொடுத்தன.

ஆபத்தில் அகப்பட்டவர்களுக்கு, நாம் நம்மாலான உதவியைச் செய்யும்படி பின்தாங்கக்கூடாது என்று இந்த தூக்கணுங்குருவிக் கதை தெளிவாய்ப் போதிக்கிறது.

42. காது. சஉ.

காட்சி	பார்வை.
செல்லுவது	போவது, ஊடுருவுவது.
தொனி	சப்தம், குரல்.
சேகரித்து	திரட்டி, கூட்டி.
விநோதம்	ஆச்சரியம்.
செவி	காது.
மெய்	தேகம், உடல்.

கண்ணின் வழியாய் காட்சி செல்வதுபோல காதின் வழியாய் தொனி செல்லுகிறது. வெளியே கேட்கும் சப்தங்களைச் சேகரித்து அடக்கிக்கொள்ளும்படியாக, கடவுள் காதை விநோதமான மாதிரியாக உருவாக்கி இருக்கிறுர். காதுகேளாதவர்களுக்கு செவிடர் என்கிற பேர் வழங்கப்படுகிறது. மனுஷரில் சிலர் செவிடும், ஊமையுமாய் இருக்கிறுர்கள். செவிடரும் ஊமையரும் புஸ்தகம் வாசிக்கும்படியாகவும் பயிற்றுவிக்கலாம். அவர்கள் பேச ஆசைப்பட்டால் விரல்களின் சாடையால் தங்கள் மனதின் எண்ணங்களைத் தெரிவிக்கலாம். மனுஷராகிய நாம் கண்ணுல்மாத்திரம் பார்க்கிறுேம், காதால்மாத்திரம் கேட்கிறுேம், மூக்கால் மாத்திரம் முகருகிறுேம், வாயால்மாத்திரம் ருசிக்கிறுேம், ஆனுல் சரீரத்தின் எல்லா அவயவங்களாலும் உணர்ந்துகொள்ளுகிறுேம். ஆதலால் மனுஷர் மெய்,

வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளுள்ள வர்கள். நமக்கு காது இரண்டு, ஆனால் வாயோ ஒன்று தான். ஆகையால் அதிகம் கேட்டுக்கொண்டு கொஞ்சம் பேசுவது தகுதி.

43. தவளையும் எருதும். சா௩.

ரொம்ப	அதிக.
அடக்கி	விடாமல், உள்வாங்கி.
உப்ப	பெருக்க, எழும்ப.
அவஸ்தை	சங்கடம், வருத்தம்.
சினமாகி	கோபமாகி.
இவ்வண்ணம்	இந்தமாதிரி.
கர்வம்	பெருமை.

ஒரு தவளைக்குஞ்சு ஒருநாள் தன்னுடைய தாயினிடத்தில் போய்:—அம்மா, அம்மா! அதோ தோட்டத்தில் ஒரு எருது மேய்கிறது; அவ்வெருது ரொம்ப புஷ்டியுள்ளது என்று சொல்லிற்று. அதைக் கேட்ட தாய்த் தவளை: தன் மூச்சை அடக்கி வயிற்றை விம்மிக் கொண்டு, "அது இவ்வளவு பருமனா?" என்று கேட்டது; அதின் பருமனுக்கு இவ்வளவு எம்மாத்திரம் என்று குஞ்சு சொல்லிற்று. தாய்த்தவளை கோபமாகி: "பின்னை இவ்வளவு பருமமிருக்குமா" என்று சொல்லி அதிகமாய் வயிற்றை உப்பிக்கொண்டு கேட்டது. எருதுபோல உப்பலாமென்று தாய்படும் அவஸ்தையைக் குஞ்சு கண்டு: "அம்மா, ஏன் உன் வயிற்றை வீணாய் உப்பப்பண்ணுகிறாய், நீ எவ்வளவாய் உப்பினாலும் எருதின் பருமனுக்குச் சமமாகாது" என்றது. அதைக் கேட்ட தாய்த்தவளை அதிக சினமாகி: "இன்னும் உப்பினால் எருதின் பருமனுக்குச் சமமாகமாட்டேனா? இதோ பார் எருதைப்போல உப்பிவிடுகிறேன்" என்று மூச்சை பலமாய் அடக்கி அதிக விசை

யாய் விம்மிற்று. விம்மவே வயிறு வெடித்து மாண்டது. இவ்வண்ணமே அநேக மனுஷர் கர்வத்தினுல் நாசமடைகிருர்கள்.

44. எப்பொழுதும் நிஜத்தைப் பேசு. ௪௪.

தமையன்	அண்ணன், மூத்தசகோதரன்.
தம்பி	இளையசகோதரன்.
வாதாடி	வழக்குபண்ணி, பேசிக்கொண்டு.
நிஜஸ்தர்	உண்மை பேசுகிறவர்கள்.
நிஜம்	உள்ளது, சத்தியம்.

ஒருநாள் ஒரு தாய் தன்னுடைய மூத்தமகன் கையில் ஒரு கலயத்தைக் கொடுத்து பால்காரன் வீட்டுக்குப் போய் பால் வாங்கிவா அப்பா என்று சொல்லி அனுப்பினுள். தமையன் பால் வாங்கப்போகிறதைத் தம்பி கண்டு, அவன் பின்னுலே ஓடிப்போய்: நான் போய் பால் வாங்கிக்கொண்டுவருவேன் என்று சொல்லி தமையன் கையிலிருந்த கலயத்தைப் பிடித்து இழுத்தான். அவன் கலயத்தை பலமாய்ப் பிடித்திருந்தாலும், இருவரும் நான் போவேன், நான் போவேன் என்று வாதாடி இழுத்துக்கொண்டிருந்ததால் கலயம் கைதவறி விழுந்து உடைந்துபோயிற்று. கலயம் உடைந்துபோனதையிட்டுத் தமையன் அழுதான், அப்பொழுது கிட்டநின்ற ஒரு பெண்பிள்ளை: ஏன் அப்பா அழுகிருய்? கலயத்தைப் பால்காரன் உடைத்துப்போட்டான் என்று உன் தாயாரிடத்தில் சொல்லிப் போடுகிறதுதானே என்று சொன்னுள். அதைக் கேட்டவுடனே அவன் தன் அழுகையை நிறுத்திவிட்டு, நான் நிஜத்தையே சொல்லுவேன்; என் தாயார் கோபித்தாலும் கோபிக்கட்டும், நான் பொய்சொல்லமாட்டேன் என்று சொன்னுன்.

இந்தப் பையனைப்போல் நாம் எப்பொழுதும் சத்தியத்தைப் பேசுவது நலம். நிஜஸ்தரை எவர்களும் நம்புவார்கள். பொய்யர் நிஜம்சொன்னாலும் நம்பமாட்டார்கள்.

45. காகம். ௪௫.

துணிவு	பயமில்லாதகுணம்.
சுறுசுறுப்பு	எப்பொழுதும் வேலைசெய்கிறகுணம்.
பலகாரம்	தின்பண்டம்.
விருட்சங்கள்	மரங்கள்.
கிழக்குவெளுக்கும்நேரம் ...	விடியற்காலம், அதிகாலை.
கரையும்	கூப்பிடும்.
அளிக்கிற	கொடுக்கிற.

இது ஒரு காக்கையின் படம். அது எவ்வளவு கறுப்பாயிருக்கிறது பார். காகமானது துணிவும் சுறுசுறுப்பும் உள்ள ஒரு பட்சி. அது குதித்துக் குதித்துத் திரியும். நாய்களைக் கொத்தித் துரத்திவிட்டு அவைகளின் தீனியைத் தின்னும்; கோழிமுதலானவைகளோடு கூடிக்கொண்டு அவைகளுக்கு வைத்திருக்கும் இரையையும் தந்திரமாய்த் தின்றுவிடும். சிறுபிள்ளைகளு

டைய கையில் ஏதாவது பலகாரம் இருந்தால் வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு பறந்துவிடும். காகங்கள் விருட்சங்களில் கூடுகட்டும். கிழக்கு வெளுக்கும் நேரத்தில், அவைகள் விழித்துக்கொண்டு, கா, கா, கா என்று காது அடைத்துப்போகும்படிக் கரையும்.

காக்கை தன் குஞ்சுகளைப் பத்திரமாய்ப் பேணும்; "காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்று ஒரு பழமொழியும் இருக்கிறது. காக்கைக் குஞ்சுகள் இரைக்காகக் கரையும்போது தாய்க்காகங்களைக் கொண்டு தேவன் அவைகள் பசியை ஆற்றுகிறார். கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கு ஆகாரங்களை அளிக்கிற தேவன் நம்மை மறப்பாரா? நமது பரமபிதாவாகிய தேவனுக்கு நாம் கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளாய் நடந்தால் அதிலும் அதிகமாகவே நன்மைசெய்வார்.

46. இரட்சிப்பின் வழி. சுகா.

அடையலாம் .... சேரலாம், போகலாம்.
காலங்கழிப்பது .... ஜீவித்திருப்பது.
இரட்சண்யம் .... மோட்சமடைவது.
விசுவாசித்து .... ஒப்புக்கொண்டு.
இலவசம் .... கிரயமில்லாமல்.
கெஞ்சு .... மன்றாடு, வேண்டிக்கொள்.

மரித்தபின்பு மோட்சம் அடையவேண்டுமென்று ஆசைப்பட்டால் அதற்கு வழி எப்படி? அநேக மனிதர் ஏழைகளுக்குத் தர்மமிடுகிறதினாலும், நல்நடக்கையாய்க் காலங்கழிப்பதாலும் மோட்சமடையலாம் என்று நினைத்துக்கொள்ளுகிறார்கள். மண்குதிரையின்மேலேறி ஆற்றைக் கடக்கலாமா? கடக்கலாகாது. அதுபோல மோட்சமடையும்படி அவைகள் வழிகள் ஆகாது. தர்மம் கொடுப்பதும் நல்நடக்கையாய் நடப்

பதும் ஏன் வழிகளாகாது? நம்முடைய முதற்றரமான கிரியைகளிலும் பாவம் கலந்திருக்கிறதினாலே நற்கிரியைகளைச் செய்வது மோட்சமடையும் வழி ஆகாது. வேறெவ்வழியாய் இரட்சண்யம் கிட்டும் என்று கேட்பாயோ? இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே இரட்சண்யம் கிட்டும். அவர் ஒருவரே மெய்யான இரட்சகர். அவரை விசுவாசித்து அவருடைய கட்டளைகளின்படி நடப்பதே நம்மேல் விழுந்த கடமை.

இயேசு பட்ட பாடுகளினிமித்தம் தேவன் உன் பாவங்களையெல்லாம் இலவசமாய் மன்னிக்கிறார். நீ இயேசுவை நோக்கி: "பாவிகளின் இரட்சகராகிய இயேசுவே, என் பாவங்களெல்லாவற்றையும் மன்னித்து என்னை மோட்சத்தில் சேர்த்துக்கொள்ளும்" என்று கெஞ்சு. அவர் தம்முடைய பரிசுத்தஆவியைக்கொண்டு, உன் இருதயத்தைச் சுத்தமாக்கி, நீ மரிக்கும்போது மோட்சத்தில் சேர்த்துக்கொள்ளுவார்.

47. புல்லும் புஷ்பமும். ௪௭

கொத்து .... செண்டு.
இனம் .... ஜாதி, வகை, ஒரேமாதிரி.
கொல்லை .... தோட்டம், வளவு.
மகிமை .... சிறப்பு, கனம், மேன்மை.
சவரக்ஷணை ...... பாதுகாப்பு, பேணுதல்.
ஆத்திரம் .... தடுக்கு, படபடப்பு.
அந்தஸ்து .... நிலைமை, ஸ்திதி.

அவமதிப்பு ...... ஈனவீனம்.
நீசன் .... ஏழை, தரித்திரன்.
கற்றூர் .... படித்தவர்கள்.
கல்லாதவர் ...... படியாதவர்கள்.

அழகுள்ளதும், மணமுள்ளதுமான பல புஷ்பங்களைக் கொத்தாகச் சேர்த்து ஒரு புற்கொடியால் கட்டியிருந்தது. நான் அதைக் கண்டு துக்கப்பட்டு: "ஐயோ, அழகற்றதும், மணமற்றதுமான இந்த அற்பப் புல்லைப் புஷ்பக்கொத்தில் ஏன்தான் வைத்தார்கள்" என்று சொன்னேன்.

புல் அதைக் கேட்டு கூவென்று அழுது: "ஐயா, பொறும், பொறும். இனம் இனத்தை மறக்குமா? 'இனம் இனத்தோடு' என்று முதியோர் சொன்னமொழி பொய்ப்பாமா? நான் அழகற்று, நிறமற்று, மணமற்று இருந்தாலும், கடவுளுடைய கொல்லையில்தான் வளருகிறேன், நானும் தேவனுடைய சவரக்ஷணையால் வாழும் ஒரு சிருஷ்டியாய் இருக்கிறேன். எனக்கு என்னுல் ஒரு மகிமையும் இல்லை, நான் என் ஆண்டவரின் இரக்கத்தையே நம்பியிருக்கிறேன்" என்று ஆத்திரத்தோடு சொன்னது.

ஒருவன் எவ்வளவு தாழ்ந்த அந்தஸ்திலிருந்தாலும் அவனை அவமதியாதே. அப்பா! நீ நீசனையும் நேசி. நீசரும், இராசரும், கற்றூரும், கல்லாதவரும், எல்லாரும் ஒரே பிதாவாகிய மகா தேவனுடைய மக்கள்தான்.

48. பூனைக்குட்டி. ௪௮.

படம்	சாயல்.
நாடா	அகன்ற பட்டை.
பீற்ற	கிழிந்துபோன.
கற்க	படிக்க.
நாளெல்லாம்	ஒருநாள் முழுவதும்.
அன்றன்று	அந்தந்த நாள்.

பூனைக்குட்டியின் படத்தைப் பார்த்தாயா? — ஆம் பார்த்தேன்; கழுத்தில் ஒரு பட்டுநாடா கட்டியிருக்கிறது, ஒரு பந்தை உருட்டி விளையாடுகிறது.—ஆம், ஆம் விளையாடுகிறது. பிள்ளைகள் ஆட்டத்தின்மேல் பிரியப்படுகிறதுபோல் பூனைக்குட்டியும் பிரியப்படுகிறது. பூனைக்குட்டிக்கு வேலை என்ன? பாலைக் குடிப்பதும், பீற்றப்பாயில் புரளுவதும், கண்ணைமூடி தூங்குவதுமே அதின் வேலை. அவைகளுக்குப் பள்ளிக்கூடமுண்டா, பாடமுண்டா? பூனைக்கேது பள்ளிக்கூடம்? பூனைக்குட்டிக்கு ஏது பாடம்? உனக்குப் படிப்பும், பள்ளிக்கூடமும் இருக்கிறதல்லவா? ஆகையால் நீ பூனைக்குட்டியைப்போல ஓடி, ஆடி, உறங்கப் பிரியப்படக்கூடாது. நீ வாசிக்கவும் எழுதவும் கணக்குசெய்யவும் கவலையோடு கற்கவேண்டும்.

பிள்ளைகள் ஆடவே கூடாதா? என்று கேட்கிறாய், ஆடவேண்டியதுதான்; ஆடுவதும் தேகத்துக்குச் சுகத்தை

யும் பலத்தையும் தரும் என்பது நிசம்தான்; ஆனால் பிள்ளைகள் எப்பொழுது ஆடவேண்டும்? நாளெல்லாமா? நாளெல்லாம் அல்ல. அன்றன்று படிப்பு முடிந்த பிற்பாடு ஆடலாம், பாடலாம், ஓடித்திரியலாம். விளையாட்டை விரும்பி பாடத்தை அசட்டை செய்யலாமா? அசட்டைசெய்யக்கூடாது.

49. விருட்சம். ௪௯.

அந்தம் .... முடிவு, நுனி.
உறிஞ்சி .... இழுத்து.
ஏற்றுகின்றன ...... செலுத்துகின்றன.
பூமிமட்டம் .... தரை.
பாகம் ... . பங்கு.
தெங்கு........... தென்னமரம்.
உத்திரம்.......... தூண், பெரிய கட்டை.

இதோ விருட்சத்தின் படத்தைப் பார். அதின் வேர்கள் மண்ணுக்குள் ஆழமாய் இறங்கியிருக்கின்றன. அதினாலேதான் காற்று விசையாய் அடித்தபோதிலும் அது விழாமல் நிற்கின்றது. வேர்களின் அந்தம் மெல்லிய நூல்போலிருக்கும், அந்த மெல்லிய

வேர்கள் பூமியின் ஈரத்தை உறிஞ்சி மரத்துக்கு ஏற்று கின்றன. மரத்தில், பூமிமட்டத்துக்குமேல் காணப் படுகிற பாகமுதல் கிளைகள் பிரியும் பாகம்மட்டுமுள்ள தண்டுக்கு அடிமரம் என்று பேர். மரத்தை மூடியிருப் பதற்குப் பட்டை என்று பேர். அடிமரத்தின் உச்சி யில் இருந்து கிளைகள் பிரிந்து நாலாபக்கத்திலும் படர்ந் திருக்கும். கிளைகளிலுள்ள சிறு கொப்புகள் மிலாறு கள் என்னப்படும். அந்த மிலாறுகளில் இலைகளையும், புஷ்பங்களையும், கனிகளையும் காணலாம். ஆனால் பலா மரம் கட்டையிலும், வேரிலும் காய்க்கும்.

விருட்சங்களில் பலமாதிரியுண்டு; அவைகளுக்கு வெவ்வேறு பேருமிருக்கின்றன. சில மரங்களின் பேரைக் கேள்;—அத்தி, ஆல், புங்கு, புளி, பூவரசு, நெல்லி முதலானவையாம். மா, பலா, கொய்யா, தெங்கு முதலிய மரங்களின் கனிகளைப் பிரியமாய்ச் சாப்பிடுவார்கள். தேக்கு, கருங்காலிமுதலிய மரங்கள் உத்திரங்களுக்கு ஆகும். சந்தனக்கட்டை அதிக மண முள்ளது, எட்டிப்பழம் கொடிய கசப்புள்ளது.

50. பேராசையுள்ள நாய். ருO.

இறைச்சி	....	கறி, மாமிசம்.
அக்கரை	....	அந்தப்பக்கம்.
விலாப்புடைக்க	....	வயிறுநிறைய.
ஏமாந்து	....	ஏங்கி.
பற்றாது	....	போதாது.

ஒரு நாய் இறைச்சித்துண்டு ஒன்றை எப்படியோ திருடி கௌவிக்கொண்டு ஒரு ஆற்றைக் கடந்து அக் கரை சேரும்படி போயிற்று. நடு ஆற்றில் அது போ கும்போது தண்ணீரிலே தன் நிழல் தெரிந்தது. அந் நிழல் தன் நிழல் அல்ல, தன்னைப்போல் வேறொரு

நாய் இறைச்சித்துண்டைக் கொண்டுபோகிறது என்று நினைத்து, அந்த நாயின் வாயிலிருக்கும் இறைச்சியையும் பிடுங்கிக்கொண்டால் விலாப்புடைக்கத் தின்னலாமே என்று பேராசைகொண்டு, வாயைத் திறந்து

சட்டென்று கௌவிற்று. கௌவவே வாயிலிருந்த துண்டு ஜலத்தில் விழுந்து காணுமல்போனதால் நாய் ஏமாந்துபோயிற்று. கடவுள் தங்களுக்கு அளித்திருக்கும் வாழ்வு பற்ருது என்று எண்ணி பின்னும் சம்பாதிக்கும்படி முயலுகிற பேராசைக்காரர் பெரும்பாலும் தங்களுக்கு முன் உள்ள வாழ்வையும் இழந்துபோவார்கள் என்று இந்தக் கதையினுல் படித்துக் கொள்ளுகிறேரும்.

51. இந்தியா. ருக.

விஸ்தாரமான	விசாலமான, அகன்ற.
பர்வதங்கள்	மலைகள்.
நகரம்	பட்டணம், பெரிய ஊர்.
வசதி	தகுந்த, ஏற்ற.
அங்கிலேயதேசம்	இங்கிலாந்துதேசம்.
இராணி	இராசாத்தி.
சக்கரவர்த்தினி	அநேக அரசரை ஆளும் இராணி.

நாம் வசிக்கும் இந்த விஸ்தாரமான தேசம், இந்தியா என்று சொல்லப்படும். உயரமான பர்வதங்க

ளும், நீளமான, ஆறுகளும் உள்ள இத்தேசத்தில் திரளான ஜனங்களும் வாசம்பண்ணுகிறார்கள்.

இந்தியாவின் பிரதான நகரத்துக்கு கல்கத்தா என்று பேர். இந்நகரம் வங்காளநாட்டின் கீழ்ப்பக்கத்தில் ஓடும் ஊக்லி என்னும் ஒரு நதியின்மேல் கட்டப்பட்டிருக்கிறது. அதற்கு இரண்டாவதான நகரத்துக்கு பம்பாய் என்று பேர். இந்த பம்பாய் இந்தியாவின் மேல்பக்கத்துக் கடலோரத்தில் இருக்கிறது; கப்பல்கள் வந்து தங்குவதற்கு இது வசதியான துறைமுகமாயிருக்கிறது. தென் இந்தியாவிலுள்ள பட்டணங்கள் எல்லாவற்றிலும் பெரியதற்கு மதிராசு அல்லது சென்னபட்டணம் என்று பேர். இந்த சென்னை இந்தியாவின் கீழ்பக்கத்துக் கடலோரத்தில் இருக்கிறது; இதுவும் துறைமுகமானாலும், பம்பாயைப்போல வசதியான துறைமுகம் அல்ல. அங்கிலேயதேசத்து இராணியம்மாள் இந்துதேசத்தின் சக்கரவர்த்தினியாய் இருக்கிறார்கள்.

முன்காலத்தில் இலங்கை என்று அழைக்கப்பட்ட சிலோன் தீவு இந்தியாவின் தென்கீழ் மூலையில் இருக்கிறது. நாலுபக்கமும் ஜலத்தால் சூழப்பட்ட தரை, தீவு அல்லது திட்டு என்று சொல்லப்படுகிறது.

52. நல்ல மறுமொழி. ருஉ.

மரியாதை	சலாம், வந்தனம்.
அநந்தம்	அநேகம்.
விதித்த	தீர்மானித்த.
விதி	கட்டளை, உத்தரவு.
சாட்டுதல்	சுமத்துதல்.
மா	பெரிய.
தோஷம்	பாவம், அநியாயம்.

ஒருநாள் ஒரு துரை, பெண்பிள்ளைகள் படிக்கிற பாடசாலை ஒன்றைப் பார்க்கப்போனார்; அவரைக் கண்

டவுடன் எல்லாப் பிள்ளைகளும் எழுந்து மரியாதை செய்தார்கள். அவர்: பிள்ளைகளே! ஒரு கேள்வி கேட்பேன், அதற்கு மறு உத்தரம் யாருக்குத் தெரியுமோ அவர்கள் கைநீட்டலாம் என்று சொன்னார். உடனே எல்லாப் பிள்ளைகளும் அதென்ன கேள்வியோ என்று மலைத்து அவருடைய வாயைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

"தேவன் தராத ஏதாவது நம்மிடத்தில் உண்டா?" என்று துரை கேட்டார். உடனே ஐந்து பிராயமுள்ள ஒரு பிள்ளை, தன் கையை நீட்டினாள்.—சொல்லம்மா என்று துரை சொன்னார்:

"தேவன் தராதது பாவம்தான்"

என்று அந்தப் பெண் சொன்னாள். அது சரியான மறுமொழிதான். அநந்தம்பேர் தீமை செய்தபிற்பாடு தங்களைக் குற்றவாளிகள் அல்ல என்று சொல்லும்படி, இது எங்கள் தலைவிதி, இப்படி எங்களுக்குக் கடவுள் விதித்துப்போட்டார் என்று தங்கள் குற்றத்தை தேவன்மேல் சாட்டுகிறார்கள். இது தப்பான காரியம், விதி என்னப்பட்டதே இல்லை. நாம் பாவம் செய்தால் அது நமது சொந்தத் தப்பிதந்தான். ஒரு துஷ்டமகன் தான் செய்யும் குற்றங்களை அன்பும், புத்தியுமுள்ள தன் தகப்பன்மேல் சாட்டலாமா? சாட்டினால் அவன் தன்னை முன்னிலும் கெட்டவன் என்று ருசுப்படுத்துகிறான் அல்லவா? மனுஷர் செய்யும் அக்கிரமங்களுக்கு தேவன்மேல் பழிபோடுகிறது மா பெரிய தோஷம்.

53. கீழ்ப்படிதலுள்ள பையன். ருங.

அயல்வீடு .... அடுத்தவீடு.
அதிரசம் .... தித்திப்பான ஒரு வடை.
வருந்தினுர்கள் .... விரும்பினுர்கள்.
வாதிக்க .... வேதனைப்படுத்த, மனம்நோவ.
கண்ணுக்குமுன் ...... எதிரில்.

ஒரு பையன் அயல்வீட்டுத் தோட்டத்தில் விளையாடிக்கொண்டிருக்கையில் அவ்வீட்டார் அவனைக் கூப்பிட்டு இரண்டு மூன்று அதிரசம் கொடுத்து இதைச் சாப்பிடு அப்பா என்றுர்கள். பையனே அந்த அதிரசங்களை வாங்கமாட்டேன் என்று சொன்னுன். என் அப்பா மாட்டேன் என்கிருய் என்று கேட்டபோது: "எனக்கு அதிரசம் தின்ன ஆசைதான், ஆனுல் என் பெற்றேருக்கு அது பிரியமில்லை" என்று சொன்னுன். "நீ தின்கிறதை உன் தாயாரும் தகப்பனும் பார்த்துக்கொண்டா இருக்கிருர்கள், சும்மா சாப்பிடு" என்று மறுபடியும் வருந்தினுர்கள். அதற்கு அந்தப் பையன்: "கூடாது, கூடாது, நான் சாப்பிடமாட்டேன், எனக்கு அதிரசம் வேண்டாம், நான் என் தாய் தகப்பன் பேச்சின்படி நடக்கவேண்டும். நான் அதிரசம் தின்பதை ஒருவரும் காணுவிட்டாலும், பெற்றேர் சொல்லை மீறி இதைச் சாப்பிடுகிறேன் என்று என் மனமே என்னை வாதிக்கும். அந்த வாதனை போதாதா? பெற்றேரே வந்து பார்க்கவும் வேண்டுமோ?" என்று சொல்லிவிட்டான்.

ஒவ்வொரு பிள்ளையும் இந்தப் பையனைப்போல தன் பெற்றேர் கண்ணுக்கு எதிரில்மாத்திரமல்ல, அவர்கள் இல்லாதபோதும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.

54. பாடசாலைக்குப் போகும் சிறுபெண்: ௫௪.

நூல்கள் .... புஸ்தகங்கள்.
கிரமமாய் ... . ஒழுங்காய், சீராய்.
ஸ்திரீகள் .... பெண்பிள்ளைகள்.
கல்வியில் .... படிப்பில், அறிவில்.
தூண்ட............ ஏவ, சொல்ல.
விருத்தியாகும் ...... பெருகும், அதிகப்படும், வளரும்.

ஒரு நல்ல பிள்ளையினுடைய படத்தைப் பார்.—அவள் புஸ்தகமும் கையுமாய் நிற்கிறாளே, எங்கே போகும்படி நிற்கிறாள்? ஆடவோ? ஆடப்போகிறவள் கையில் பாடப்புஸ்தகம் என்னத்துக்கு? — எனக்குத் தோன்றுகிறபடி அந்தப் பெண் பள்ளிக்கூடத்துக்குப் போகிறாள். பிள்ளைகள் படிக்கிறதுபோல பெண்களும் படிக்கவேண்டாமா? அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு என்னத்துக்கு என்று கேட்பாயோ? பிள்ளைகளைப்போல பெண்களும் சாகாத ஆத்துமாவை உடையவர்களாய் இருக்கிறதினால், இது நன்மை, அது தீமை என்று அவர்களும் அறிந்துகொண்டு, நன்மையாய் நடக்கும்படி தேவனுடைய பரிசுத்த வேதத்தை வாசிக்கப் படித்துக்கொள்வது அவசியந்தான். படிக்கத்தெ

ரிந்த ஒரு தாய் தன் பிள்ளைகளைக் கிரமமாய் வளர்க்கப் பிரயாசப்பட ஏதுவுண்டு; அவள் தன் பிள்ளைகளுக்கு அநேக காரியங்களைக் கற்றுக்கொடுக்கவும் கூடும். ஒரு தேசத்திலுள்ள எல்லா ஸ்திரீகளும் கல்வியில் தேறினால் அல்லாமல் மற்றப்படி அத்தேசம் வாழ்வும் பாக்கியமும் உள்ள தேசமாகாது.

உனக்குச் சகோதரிகள் இருந்தால், அவர்கள் பாடசாலையில் போய்ப் படிக்கும்படி நீ அவர்களைத் தூண்டவேண்டும். பாடசாலைக்குப் போகக்கூடாதானால், புஸ்தகங்கள் வாங்கிக் கொடுத்து, நாடோறும் ஒவ்வொரு பாடம் சொல்லிக்கொடுக்கவேண்டும். வீட்டில் படிப்பதிலும் பாடசாலையில் போய் படித்தால் அதிகமாய் கல்வி விருத்தியாகும்.

55. தேக்கும் நாணலும். ருரு.

கவைக்கு .... வேலைக்கு, காரியத்துக்கு.
உறுதி .... திடம்.
மோதினால் .... தாக்கினால்.
நிகரா .... சரியா, இணையா, சோடா.
கேவலம் .... அற்பம், பலவீனம்.
புசல் .... கடுங்காற்று.
பகடி .... பரியாசம்.
அமர்ந்த .... அடங்கின, ஓய்ந்த.
அகந்தை .... பெருமை.
மனமேட்டிமை .... கர்வம்.

தேக்குமரம் ஒருதரம் ஒரு நாணலைப் பார்த்து:— கவைக்கு உதவாத நாணலே கேள், நான் எவ்வளவு பலமும் உறுதியுமாய் நிற்கிறேன். காற்று எவ்வளவு பலமாய் என்மேல் மோதினாலும் நான் அசைவேனா? அசையேன். என் பலத்துக்குக் காற்றின் பலம் எம்மாத்திரம்! நீ எனக்கொரு நிகரா? நிகரல்ல, நிகரல்ல; நீ மகா கேவலமுள்ளவன், உனக்கேது பலம்? சற்றே

காற்றடித்தால் அங்கும் இங்கும் குழைந்து விழுகிறாயே, புசலடித்தால் என்னபாடு படமாட்டாய்? உனக்கு வெட்கமில்லையா? நானும் ஒரு செடி என்று நீ தலைகாட்டவும் கூடுமா? என்று இப்படிப் பகடிபண்ணிற்று. அத்தருணத்தில் ஒரு புசல் அடித்து தேக்கை மோதி அசைத்து அடியோடே சாய்த்துவிட்டது; நாணலோ அடித்த புசலுக்கெல்லாம் அசைந்து அப்பக்கமும் இப்பக்கமும் சாய்ந்துகொடுத்து புசல் அமர்ந்தவுடனே யாதொரு சேதமுமின்றி முன்போல தலையை நிமிர்த்தி நின்று கொண்டது.

இந்தக் கதையினாலே, ஒருவனாவது தன் பெலத்தில் பெருமைபாராட்டக்கூடாது என்று நன்றாய் விளங்குகிறது. "அழிவுக்கு முன்னானது அகந்தை, விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை."

56. அது பழைய வழக்கம். ருசு.

மாமூல்	பழைய வழக்கம்.
பிசகு	தப்பிதம்.
மந்தை	ஆடுமாடுகளின் கூட்டம்.
ஆராய்ந்து	பரிசோதித்து, விசாரித்து.
உடையை	உடுப்பை.

இந்த தேசத்தாரில் அநேகர் நாங்கள் மாமூல்பிரகாரம் நடக்கவேண்டும் என்று அடிக்கடி சொல்லுகிறார்கள். மாமூல், மாமூல் என்று பேசுவது பிசகா பிசகல்லவா? பிசகுதான். எப்படி பிசகென்று கேள்;— ஒரு பாலத்தின் வழியாய் ஒரு மந்தை ஆட்டை ஓட்டிக்கொண்டு போகும்போது அதில் ஒன்று பாலத்தைத் தாண்டி ஆற்றில் குதித்துவிட்டால், மற்ற ஆடுகள் தங்களுக்கு வரும் ஆபத்தை அறியாமல் ஒன்றின்பின் ஒன்றாக எல்லாம் குதித்து நாசமாய்ப் போகுமல்லவா?

ஆடுகளுக்கு அறிவில்லாதபடியால் ஒன்றைப்பார்த்து மற்றது கெடும்; நாமும் ஆடுகளைப்போல் அறிவற்ற மூடரா? அல்லவே. தேவன் நமக்குத் தந்திருக்கிற புத்தியினாலே இன்னது நலம் இன்னது நஷ்டமென்று ஆராய்ந்து அறிந்துகொள்ளவேண்டியது நமது கடமை. அப்படி ஆராய்ந்து அறிந்துகொள்ளப் பிரயாசப்படாமல், எல்லாவற்றையும் மாமூல்படி, மாமூல்படி என்று சொல்லிக்கொண்டு நடப்பித்தால் அது பிசகான காரியம்.

நீ ஒரு ஊருக்குப் போனாய் என்று வைத்துக்கொள், அவ்வூரார் அழுக்கான உடையை உடுத்துக்கொண்டு இது எங்கள் மாமூல் என்று சொன்னால், நீயும் அழுக்கைக் கட்டலாமா? அவர்கள் பொய்சொல்லிவிட்டு அது எங்கள் மாமூல் என்று சொன்னால் நீ நிசம் பேசவேண்டாமா? அவர்கள் கல்லையும் மண்ணையும் கடவுளென்று கும்பிட்டு, இது எங்கள் மாமூல் என்று சொன்னால் நீ அதற்கு இணங்கலாமா?

ஒரு வழக்கம் நல்லதானால் அதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும்; அது கெட்டதானால் மாமூல், மாமூல் என்று சொல்லி அதின்படி செய்யாமல் அந்த வழக்கத்தைத் தள்ளிவிடவேண்டும்.

57. வாத்து. ருஎ.

சாதாரணமாய்	பெரும்பாலும், அடிக்கடி.
தள்ளாடி	ஆடி அசைந்து.
ஜவ்வு	தோல், தசை.
ரேகை	இரக்கைகள்.
அழைக்க	கூப்பிட.
அவா	ஆவல், ஆசை.

வாத்துக்கு நீண்டு அகன்ற மூக்கு உண்டு. அது சாதாரணமாய் சேறுள்ள ஜலத்தில் முழுகி, புழுக்கள் முதலான இரைகளை நோண்டித் தின்னும்.

வாத்துக்குக் கால் வாலண்டை இருக்கிறது. அது ஜலத்தில் முழுகவும் நீந்தித் திரியவும் நன்ருய் உதவுகிறது. வாலண்டை காலிருப்பது நீந்த வசதியாகிலும் நடக்க வசதியல்ல, ஆகையால் வாத்து தள்ளாடித் தள்ளாடி நடக்கிறது.

வாத்தின் விரல்கள் ஜவ்வுகளால் ஒன்ருேடொன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. இதுவும் வாத்துகள் ஜலத்தில் நீந்தித்திரியும்படி உதவியாய் இருக்கிறது. வாத்தின் ரேகைகள் நெய்ப்பதங்கொண்டிருப்பதால் ஜலம் அதில் ஏறுகிறதில்லை. தாய்வாத்து குஞ்சுகளை அழைக்கவேண்டுமானுல் குவா, குவா, குவா என்று கத்தும். உடனே குஞ்சுகள் வாலை ஆட்டிக்கொண்டு ஓடும். ஜலத்தில் முழுகவும், நீந்தவும் அந்தக் குஞ்சுகளுக்கும் மெத்த அவாவுண்டு.

பெரிய வாத்து குள்ளவாத்தைப்பார்க்கிலும் பெரிதானது. அன்னப்பக்ஷி பெரிய வாத்திலும் பெரிது.

58. ஜெபம். ரு அ.

பந்துக்கள் .... இனத்தார்.
நன்றியறிதல் ...... அடைந்த வெகுமதிக்காக வாழ்த்துதல்.
சித்தம் .... இஷ்டம், பிரியம்.
உதயகாலம் ...... அதிகாலை.
அஸ்தமனம் ...... சாயங்காலம்.
கடந்து .... சென்று, கழிந்து.

நீ உன் பந்துக்களை அல்லது பெற்றோரைப் பார்த்து, எனக்கு அன்னமிடுங்கள், வஸ்திரம் கொடுங்கள்; பலகாரம் தாருங்கள் என்று கேட்கிறாய் அல்லவா? நீ கேட்டவைகளை அவர்கள் கொடுத்தால் சந்தோஷத்தோடு உன் நன்றியறிதலைக் காட்டுகிறாயே; நாம் கடவுளை நோக்கி நமக்கு வேண்டிய காரியங்களைச் சொல்லுகிறதும், நம்மை அவர் ஆசீர்வதிக்கும்படியாகக் கேட்கிறதும், நமக்கு நன்மையானவைகளை அவருடைய தயவுள்ள சித்தத்தின்படி அருளும்படியாக மன்றாடுகிறதுமே ஜெபம். ஒவ்வொரு உதயகாலத்திலும் விழித்தவுடனே: அன்று பகல் முழுவதும் தேவன் நம்மைப் பாதுகாக்கும்படி ஜெபம் செய்யவேண்டும். அஸ்தமன காலத்திலும், கடந்துபோன பகலில் நாம் செய்த பிழைகள் என்ன உண்டோ அவைகளை தேவன் மன்னிக்க

வும், அந்த இராமுழுதும் சேதமில்லாமல் காப்பாற்ற வும் ஜெபம் செய்யவேண்டும். நாம் நமக்காகமாத்திர மல்ல, நம்முடைய சிநேகிதர், பந்துக்கள், சத்துருக்க ளுக்காகவும் சர்வ ஜனத்துக்காகவும் ஜெபம் செய்ய வேண்டும்.

நாம் ஜெபத்தின் மூலமாய் தேவனிடத்தில் கேட் கும் எந்தக் காரியமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் கேட்கவேண்டியது. ஜெபத்தின் முடிவில் "ஆமென்" என்னும் வார்த்தையைச் சொல்லுகிறோமே; அதன் பொருள் நான் கேட்டபிரகாரம் கிடைப்பதாக என்பது தான்.

59. பூகோளம். ருகூ.

பூகோளம்	பூமி, உருண்டை.
வடிவம்	உருவம், சாடை.
சமநிலம்	மட்டமான பூமி.
பிரமாண்டம்	மகா பெரிது.
ஸ்தாபகமாய்	நிலையாய்.

இந்தியாவானது பூமியிலுள்ள தேசங்களிலொன்று. நாம் வசிக்கும் இந்த பூலோகம் ஒரு பந்துவடிவமாயி ருக்கிறது. இப்பூலோகம் மகா பிரமாண்டமானதால் நமது கண்ணுக்குத் தட்டைபோல் தோற்றப்படுகிற தேயல்லாமல் வேறல்ல. கப்பல்கள் ஓரிடத்திலிருந்து புறப்பட்டு பூமி முழுவதையும் சுற்றிக்கொண்டு, மறு படியும் புறப்பட்ட இடத்துக்கு வந்து சேருகிறதால் பூமி உருண்டையாய்த்தான் இருக்கவேண்டியது. பூகோ ளமானது ஒரு இடத்தில் ஸ்தாபகமாய் வைக்கப்பட் டிருக்கிற வஸ்துவாயிராமல் சந்திரனைப்போல அந்தரத் தில் அசைவாடிக்கொண்டிருக்கிற ஒரு லோகமாயிருக் கிறது.

பூகோளத்தின் மிச்சமான பாகம் ஜலத்தால் நிறைந்திருக்கிறது. அந்த ஜலத்திரள் சமுத்திரமென்றும் கடல் என்றும் சொல்லப்படுகிறது. சமுத்திரஜலம் உப்புக் கரிக்கும். அந்த ஜலத்திரள்மேல் கப்பல் நடமாடும்.

இந்தியா என்பது ஆசியாகண்டம் என்னும் பாகத்திலுள்ள ஒரு தேசமாயிருக்கிறது. இங்கிலாந்து என்பது ஐரோப்பா என்னும் வேறொரு பிரிவிலிருக்கிறது. வேறு இரண்டு பிரிவுகளுக்கு ஆப்பிரிக்கா, அமெரிக்கா என்று பேர். இப்பூகோளத்தின் பிரதானமான நாலு பாகங்களுக்கும் ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா என்னும் நாலு பெயர்களுண்டு.

60. ஒரு பையனும் அவனுடைய கையெழுத்தும். சுவடி.

சரவை ... ... எழுத்தில் தேறும்படி பழகுகிற புஸ்தகம்.
ஏட்டை ... ... பக்கத்தை.
புகழ்ச்சி ... ... பெருமையாய்ப் பேசுதல்.
ஆசான் ... ... உபாத்தியாயர்.

ஒரு துரைசானி ஒருநாள் சாயரட்சை உலாவப் போனபொழுது பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குப் போகிற பையன் ஒருவனை எதிரே சந்தித்தாள். அவனுடைய கையில் படிக்கும் பாடப் புஸ்தகங்களும், எழுத்தில் தேறும்படியாக எழுதிக்கொண்டுவரும் சரவைப்புஸ்தகமும் இருந்தன.

புஸ்தகமும் கையுமாய் வந்த பையனை அந்த அம்மாள் கூப்பிட்டு: "உன் சரவைப்புஸ்தகத்தை நான் பார்க்கட்டுமோ?" என்று கேட்டாள்.

பாருங்கள் அம்மா பாருங்கள், என்று சொல்லி தன்னுடைய புஸ்தகத்தை எடுத்துக்கொடுத்தான்.

துரைசானி அதை வாங்கி ஒவ்வொரு ஏட்டையும் திருப்பிப் பார்த்தாள். ஏடுகளைத் திருப்பத் திருப்ப: "ஒவ்வொரு பக்கமும் எவ்வளவு சுத்தமாயிருக்கிறது, யாதொரு கிறுக்குமில்லை, மைச்சொட்டுமில்லை" என்று சொல்லிச் சொல்லித் திருப்பினாள்.

அந்தப் புகழ்ச்சியைப் பையன் கேட்டு: "அம்மா எங்கள் ஆசான் மைச்சொட்டு விழுந்தால் கத்தியால் இழைத்து எடுத்துவிடுவார்" என்று சொன்னான்.

இப்படி அவன் சொன்னதினாலே துரைசானி தன்னைப் புகழ்ந்துபேசுவது நியாயமல்ல என்று காட்டினான் அல்லவா? நம்மால் ஆகமாட்டாத காரியங்களை நம்மால் ஆகும் என்று மற்றவர்கள் சொல்லும்போது நாம், அது என்னால் ஆகாது என்று தடுத்துச் சொல்லாமல் சும்மாயிருந்துவிட்டால், நம்மால் ஆகமாட்டாத காரியம் ஆகும் என்று பொய்சொல்லுகிறதாய் இருக்கிறது.

61. பருந்து. சூக.

உச்சம்	அதிக உயரம்.
வட்டமிட்டு	சுற்றிச் சுற்றி.
தாழ	கீழே.
அதிவேகமாய்	மகா தீவிரமாய்.

மாம்சம் தின்னும் பட்சிகளில் பருந்து ஒன்று. அதின் அலகு தூண்டிலைப்போல் நுனியில் வளைந்திருக்கும்; அதின் கால் நகங்கள் கூர் உள்ளது.

அதினுடைய நீண்ட சிறகுகளாலும் கவராய்ப் பிரிந்த வாலாலும் இது பருந்துதான் என்று அறிந்துகொள்ளலாம். பருந்து ஆகாயத்தில் அதிக உச்சமாய்ப் பறக்கும், தாழ இருந்து உயர ஆகாயத்தில் ஏறுகையில் நேராய் பறவாமல் வட்டமிட்டுப் பறந்து ஏறும். பறக்

கும்போதே கீழே பூமியில் தனக்கு இரை உண்டோ என்று தேடும். எங்கேயாவது தவளை அல்லது கோழிக் குஞ்சு இருக்கிறதென்று கண்டுகொண்டால், உயர இருந்து அம்புபோல் அதிவேகமாய்ப் பாய்ந்து, தன்னுடைய கால்நகங்களால் இரையை வாரிக்கொள்ளப் பிரயாசப் படும்; சிறு மீன்களையும் சிலவேளை பிடித்துக்கொள்ளும்; சில சமயம் தெருக்களில் கிடக்கும் எச்சிலையும் வந்து தின்னும். பருந்துக்கூட்டங்களின் நடுவில் இறைச்சித் துண்டுகளை எறிந்தால் அந்தத் துண்டுகள் தரையில்விழு முன்னதாக அவைகள் பறந்து பிடித்துக்கொள்ளும்.

பருந்துகள் விருட்சங்களில் கூடுகட்டி வாழுகின்றன. கிளி, மைனா முதலிய பட்சிகளைப்போல பருந்துகளையும் பழக்கிக்கொள்ளலாம்.

62. பணம். சா உ.

நடமாடாவிட்டால் ...... வழங்காவிட்டால்.
தொல்லை .... தொந்தரவு, வருத்தம்.
நாணயம் .... பணம்.
ராஜமுத்திரை .... ராஜாவின் சாயல்.
அபூருவம் .... அருமை.
அம்பலம் ... . அதிகாரம், மேன்மை.

நமக்கு ஒரு பொருள் வேண்டுமானால் அப்பொருள் விற்கப்படும் கடைக்குப் போய், பணம்கொடுத்து அந்தப் பொருளை வாங்கிக்கொள்ளுகிறோம். பணமும், காசும் நடமாடாவிட்டால் என்னசெய்வோம்? ஒரு பொருளைக் கொடுத்து வேறொரு பொருளை வாங்கவேண்டியதாயிருக்கும். பொருளைக் கொடுத்துப் பொருளை வாங்குவது மகா தொல்லையான முறை.

பொன், வெள்ளி, செம்பு என்னும் லோகங்களை வட்டமும், தட்டையுமான சிறுதுண்டுகளாக்கி, அதின் மேல் ராஜமுத்திரையைப் பதித்து அந்தத் துண்டுகளை நாணயமாக வழங்கிவருகிறார்கள். பன்னிரண்டு பைசா ஒரு அணா என்றும், பதினாறு அணா ஒரு ரூபாய் என்றும் சொல்லப்படுகிறது. பைசா, கால் அணா, அரை அணா இவைகள் செம்பினாலும்; அரைக்கால் ரூபாய், கால் ரூபாய், அரை ரூபாய், முழு ரூபாய் இவைகள் வெள்ளியினாலும் செய்யப்பட்டிருக்கின்றன. செம்பைப்போல வெள்ளி அதிகமாய் அகப்படுகிறதில்லை. ஆதலால் செம்பிலும் வெள்ளி அதிக விலையுள்ளது. பொன் அகப்படுவதோ மகா அபூருவம். ஆனதால் வெள்ளியிலும் பொன் அதிக விலையுள்ளதாயிருக்கிறது.

பணம் அநேக நன்மைகளைச் செய்கிறது. "பொன்னம்பலமுண்டானால் என்ன அம்பலம் உண்டாகாது" என்று ஒரு பழமொழியும் இருக்கிறது. ஆனால் பண

ஆசையோ அநேக தீமைகளை உண்டாக்குகிறது. பொன்னைச் சம்பாதிக்க முயல்வதிலும் ஞானத்தைச் சம்பாதிக்க முயல்வது சிறந்தது.



63. கிணற்றில் விழுந்த குள்ளநரி. ௬௩.

தருவாயில்	நேரத்தில்.
ததும்பும்	அசையும், உழலும்.
பிராணன்	உயிர்.
அபாயத்தில்	மோசத்தில்.
அவதி	துன்பம், உபத்திரவம்.
ஆருத்துயரம்	நீங்காத துக்கம்.
சகாயம்	உதவி.
அனுதாபம்	இரக்கமான வார்த்தை.

ஒரு குள்ளநரி காட்டிலிருந்த ஒரு கிணற்றில் எப்படியோ விழுந்துவிட்டது. விழுந்தபின்பு தன் கால்களை அடித்து நகங்களால் கிணற்றின் சுவரைப் பிடித்து, சிலநேரம் தலையை ஜலத்துக்குமேல் நிமிர்த்திக்கொண்டிருந்தது. அத்தருவாயில் அவ்வழியே போன ஒரு ஓநாய் கிணற்றுக்குள் ஜலம் ததும்பும் சத்தம் கேட்டு, கிணற்றோரம் வந்து உள்ளே எட்டிப்பார்த்தது. அப்பொழுது சாகப்போகிற நிலைமையிலிருந்த குள்ளநரி: "ஐயா! என் பிராணன் அபாயத்திலிருக்கிறது, ஒருகயிறு

விட்டு என்னைத் தூக்கி இரட்சிக்கமாட்டீரா?" என்று கெஞ்சினது. அதற்கு அந்த ஓநாய்: "ஐயோ சிநேகித னே, உன் அவதியைப் பார்த்து ஆருத்துயாமடைகி றேன்; நீ கிணற்றுக்குள் எப்படி விழுந்தாய்? விழுந்து எத்தனை நாழிகையாயிற்று அப்பா?" என்று கேட்டது. அதைக் கேட்ட குள்ளநரி: "ஐயா நான் நன்றாய் இருப் பது உமக்குப் பிரியமானால், என்னைக் கேள்விகேட்டுக் காலதாமதம் செய்யலாகாது; "பசியும் தலையிடியும் தனக்குவந்தால் தெரியும்" என்கிற பழமொழிபோல என் ஆபத்தில் நீர் இருந்தால் அப்போது வருத்தம் தெரி யும்; அங்கே நின்றுகொண்டிராமல் எங்கேயாவது போய் கயிறு சம்பாதித்து வாரும்" என்று சொன்னது. அதுபோல் நாமும் அவதிப்படுகிறவர்களண்டை நின்று ஐயோ, ஐயோ என்று ஆயிரம்தரம் சொல்லி அனுதாபப் படுகிறதைப்பார்க்கிலும் அவர்கள் அவதி நீங்க உதவி செய்வதே பிரயோசனமுள்ளது. அற்பசகாயம் அதிக அனுதாபத்திலும் மேலானது.

64. மற்றவர்களுக்கு நாம் செய்யும் கடமை. சுசு.

பிறன் .... அயல்வீட்டுக்காரன்.
எரிச்சல் .... கோபம்.

நமக்கு மற்றவர்கள் எவைகளைச் செய்யவேண்டு மென்று நாம் ஆசைப்படுவோமோ அவைகளையே நாம் மற்றவர்களுக்குச் செய்யவேண்டுமென்று, இயேசுகிறி ஸ்து போதித்தார். உன்னைப்போல் உன் பிறனையும் நேசி என்பதே கடவுளுடைய இரண்டாம் பிரதான கட்டளையாய் இருக்கிறது.

உன்னைக் காண்கிறவர்களெல்லாரும் எரிச்சலாய்ப் பேச உனக்குப் பிரியம் இருக்குமா? பிரியம் இராதே. ஆதலால் பேசுகிறவர்களோடு நீ எரிச்சலாய்ப் பேசலாகாது. கண்டவர்களெல்லாரும் உன்னை அடிக்க உனக்கு மனமிருக்குமா? மனமிராதே; ஆதலால் கண்டவர்களெல்லாரையும் நீ அடிக்கலாகாது. உன் பொருளை மற்றவர்கள் திருடிக்கொண்டுபோக விரும்புவாயா? விரும்பமாட்டாய், ஆதலால் மற்றவர்களுடைய பொருளைத் திருட நீ விரும்பலாகாது. உனக்கு ஆபத்து வந்துவிட்டால் மற்றவர்கள் வந்து உதவிசெய்யவேண்டும் என்று ஆசைப்படமாட்டாயா? ஆசைப்படுவாய்; ஆதலால் நீயும் மற்றவர்களுடைய ஆபத்தில் உதவிசெய்யவேண்டும். எவனைக்குறித்துப் பேசினாலும் உள்ளதையே பேசு, எதைச் செய்தாலும் நியாயமாய்ச் செய். எல்லா மனுஷரிடத்திலும், மிருகஜீவன்களிடத்திலும் அன்பு பாராட்டு; அப்பொழுது உன் மனம் சந்தோஷமடையும், உன்னை எல்லாரும் நேசிப்பார்கள்.

65. சுகத்தைப் பேணும் முறை. சுரு.

விதி	கட்டளை, சட்டம்.
சட்டை	மதிப்பு.
அசட்டை	மதிப்பில்லாதது.
மிதமிஞ்சின	அதிகமான.
மைதானம்	திறந்தவெளி.
அதிகாலை	விடியுநேரம்.

நீ சுகமாயும் பலமாயும் இருக்க உனக்கு மனமிருக்கும் அல்லவா? ஆம் அதுதான் என் மனம். நீ சுகமும் பலமுமாய் இருக்கும்படி பிரியப்பட்டால் நான் சொல்லப்போகிற விதிகளின்படி நடக்கக் கவலையாய் இருக்க

வேண்டும். அவ்விதிகளைச் சட்டைசெய்யாமல் அசட்டைசெய்துவந்தால் உனக்குச் சுகமும் பலமுமிருக்க மாட்டாது. அவ்விதிகளைக் கேள்:

1. சுத்தமான ஆகாயம் வர இடமில்லாத அறையில் தூங்க அல்லது வாசம்செய்யக்கூடாது.

2. கலங்கிப்போன ஜலத்தைக் குடிக்கலாகாது; கண்ட பதார்த்தங்களையெல்லாம் தின்னவும் கூடாது. முற்றிலும் பழுக்காத பழங்களையும் மிதமிஞ்சித் தித்திக்கும் பலகாரங்களையும் சிறு பிள்ளைகள் சாப்பிடுகிறதினால் அடிக்கடி நோயடைகிறார்கள்.

3. உன் உடம்பும் உடுப்பும் சுசியாய் இருக்கவேண்டும், நீ இருக்கும் வீட்டை அடிக்கடி சுண்ணும்பால் வெள்ளையடிக்கவேண்டும். வீட்டின் அருகே ஜலம் கட்டிநிற்க இடங்கொடுக்கக்கூடாது. நனைந்துபோன வஸ்திரங்களைக் கட்டிக்கொண்டு திரியவும், ஈரமாயிருக்கும் தரையில் உட்காரவும் தூங்கவும் கூடாது.

4. ஒவ்வொருநாளும் ஒரு மைதானத்தில் போய் உலாவவேண்டும், அல்லது கொஞ்சநேரம் ஆடவேண்டும். அதிகாலையில் விழித்துக்கொள்ளவேண்டும். இரவில் அதிக நேரம் விழித்திருக்கக்கூடாது. உனக்குச் சுகம்கொடுக்கும்படி காலையிலும் மாலையிலும் கடவுளை மன்றாடவேண்டும்.

66. அடிக்கு உதை தகாது. சூசூ.

தொழுவம் .... ஆடுமாடுகளை அடைக்கும் வீடு.
போர்புரிந்தன .... சண்டைசெய்தன.
அற்ப .... கொஞ்ச.
தூண்டிவிட .... ஏவ.

ஒருநாள் ஒரு இடையன் தன் தொழுவத்திலுள்ள காளைகளையும் பசுக்களையும் மேய்ச்சலுக்கு அவிழ்த்து

விட்டான். அவிழ்த்துவிடவே எல்லா மாடுகளும் தண்ணீர் குடிக்கும்படி தொட்டியண்டை போயின. அத்தொட்டியில் ஒரு சொட்டு ஜலமுதலாய் இல்லை. தண்ணீர் ஊற்றப்படுமட்டும் அங்கேயே மாடுகள் சுற்றிக்கொண்டிருந்தன. அப்பொழுது ஒரு பசு தற்செயலாய்த் திரும்பி வேறொரு பக்கத்துக்குப் போகப்போயிற்று. அப்படி அந்தப் பசு திரும்புகையில் அதின் கொம்பு பக்கத்தில் நின்ற ஒரு காளையின்மேல் பட்டது. உடனே அந்தக் காளை தன் கிட்டநின்ற மாட்டை முட்டிற்று. சில நிமிஷங்களுக்குள் மந்தை முழுவதும் ஒன்றோடொன்று சீறி முட்டிப் போர்புரிந்தன.

இந்த மாடுகளுக்குள் சண்டையுண்டானதுபோலவே அநேக வீடுகளிலும் சண்டைகள் உண்டாகிறது. ஒரு சிறு பிள்ளை சொன்ன அற்பவார்த்தையைக்கொண்டு அந்த வீட்டார் எல்லாரும் சண்டையாகிவிடுகிறார்கள். ஆதலால் தம்பி! ஒரு அடிக்கு மறு அடி கொடுக்க ஆசைப்படாதே. உன்னை அடித்தவனை நீ அடியாமலிருந்தால் நீ சண்டைக்காரனென்று பேரெடுக்கமாட்டாய், மற்றவர்களையும் சண்டைக்காரராகத் தூண்டிவிடமாட்டாய்.

67. மச்சங்கள். சூஎ.

ஜீவிக்கும்	வாழும், வசிக்கும்.
பேதம்	வித்தியாசம்.
செவிப்புலன்	கேட்கும் சக்தி.
சினை	கர்ப்பம், முட்டை.
சமஸ்த	எல்லா.
ஜனிக்கிறது	உற்பத்தியாகிறது.
பலுகும்	பெருகும், விர்த்தியாகும்.
நீச்சு	ஜலத்தில் நீந்துதல்.

ஜலத்தில் ஜீவிக்கும் மச்சமானது தரையில் நடமாடும் பிராணிகளுக்கு பேதப்படும். மிருகங்கள் கால்க

ளால் அங்குமிங்கும் நடமாடும். மச்சங்களோ வாலா லும் செதிள்களாலும் நீந்தித்திரியும். மச்சங்கள் ஜலத்தில் லேசாய் நடமாடத்தக்கதாக அவைகளின் உடல் நீளமாய் உண்டாக்கப்பட்டிருக்கிறது. சில மீன்களுக்குத் தோலின்மேல் சிலாம்பு உண்டு; சிலவற்றுக்கு சிலாம்பு இராதபடியால் தோல் பளபளப்பாய் இருக்கும். மீன்முள் வெண்மையாயும், மெதுவாயுமிருக்கும்; மீன்களின் இரத்தம் குளிர்ந்திருக்கும்.

மீன்கள் நம்மைப்போல் மூக்கினால் சுவாசம்விடாமல், செவித்துவாரங்களின் வழியாய் ஜலத்துக்குள்ளிருந்து மூச்சுவிடும். மீனை உயிரோடு பிடித்துத் தரையில் வைத்தால் சீக்கிரத்துக்குள் செத்துப்போம்.

மீன்களுக்குச் செவிப்புலன் உண்டு; சில தெப்பக் குளங்களில் வளர்க்கப்படும் மீன்களுக்கு இரைபோட மணியடிப்பார்கள். மணிச்சத்தம் கேட்டவுடனே மீன்கள் ஏகமாய்க் கூடிவரும். மீன்கள் முட்டையிலிருந்து ஜநிக்கிறது. கோழி முதலான பட்சிகளைப்போல மீன்கள் தங்கள் முட்டைகளை அடைகாக்கிறதில்லை. ஜலத்தோடு ஜலமாய் மிதக்கும் மீன்முட்டைகள் சூரியகாந்தியால் அனல்பெற்று, குஞ்சுகள் புறப்படுகின்றன.

மீன்களைப்போல் அதிசீக்கிரத்தில் பலுகும் ஜீவன் வேறொன்றில்லை. ஒரு மீனின் சினை, சமஸ்த ஜனத்தின் தொகையைப்பார்க்கிலும் அதிகமாய் இருக்கும்.

68. இயேசு சிறுவர்மேல் காட்டிய சுஅ. அன்பு.

சமயத்தில்	நேரத்தில்.
ஆசீர்வதிக்க	வரமளிக்க.
திரு	திவ்விய.
அவர்வசம்	அவரிடத்தில்.

இயேசுகிறிஸ்து இப்பூலோகத்திலிருந்த ஒரு சமயத்தில் சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளை அவரிடத்தில் கொண்டுவந்து, அவர் தம்முடைய கரங்களை அவர்கள் தலைமேல் வைத்து ஆசீர்வதிக்கவேண்டுமென்று கேட்டார்கள். அப்பொழுது பக்கத்தில் நின்ற ஆட்கள் பிள்ளைகளைக் கொண்டுவந்த தாய்மாரைப் பார்த்து, நீங்கள் ஏன் இப்படி அவருக்குத் தொந்தரவு கொடுக்கிறீர்கள்; போங்கள், போங்கள் என்று சொல்லித் துரத்தினார்கள். இயேசுவோ அப்படித் தடுத்துத் துரத்தினவர்களைக் கண்டித்து சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள், அவர்களைத் தடைசெய்யாதிருங்கள்; மோட்சலோகம் அப்படிப்பட்டவர்

களுடையது என்று சொல்லி, அந்தப் பாலரை அணைத்துக்கொண்டு, தமது திருக்கரங்களை அவர்கள் சிரசின் மேல் வைத்து அவர்களை ஆசீர்வதித்தார்.

இயேசுகிறிஸ்து இப்பொழுது பரமண்டலத்தில் இருக்கிறார்; ஆனால் பூமியிலும் அவர் இருக்கிறார். நீ அவரிடத்தில் ஏதாவது கேட்கவேண்டுமென்று விரும்பி, உரக்கப்பேசாமல் வாய்க்குள்ளே பேசினாலும் அவர் அதைக் கேட்டுக்கொள்ளுகிறார். நீ அவரைக் குறித்து நினைத்தவுடனே அவர் அதை அறிந்துகொள்ளுகிறார். எந்தவேளையிலும் அவர் உன் கிட்ட இருக்கிறார். அவர் மகா அன்புள்ளவர். அவரோடு சிநேகமாயிருக்கும்படி பிரயாசப்படு. அவர் வசம் உன்னை ஒப்புக்கொடுத்து: இயேசுவே! உம்மைப்போல என்னையும் நல்லவனாக்கும் என்று கேள்.

69. பனைமரமும் சுரைச்செடியும். சூக.

பனைமண்டை	பனையின் உச்சி.
கவிந்து	மூடி.
வாழ்வும்	ஜீவனும்.
தலையெடுப்பு	வளர்ச்சியும், பெருமையும்.
கண்டித்தது	கடிந்துகொண்டது.
உளுக்கும்	மக்கும், கெடும்.

ஒரு பனைமரத்தின் அடியில் ஒரு சுரைச்செடி முளைத்துக் கொடிவிட்டு தன் கொடிகளால் பனைமரத்தைச் சுற்றிச் சுற்றி ஏறி சில மாதங்களுக்குள்ளாக பனைமண்டையையும் கவிந்துகொண்டது. ஒருநாள் அந்த சுரைச்செடி பனையைப் பார்த்து: "ஐயா நீர் பிறந்து எத்தனை வருஷமாயிற்று?" என்று கேட்டது. "நான் பிறந்து நூறுவருஷமாயிற்று அப்பா" என்று பனை சொல்லிற்று.

"நூறு வருஷமாயிற்று? வயது நூறுகியும் வளர்த்தி இவ்வளவுதானு? நான் பிறந்து சில மாதங்கள் தான் ஆயிற்று, அப்படியிருந்தும் எப்படி வளர்ந்துவிட்டேன் பார்த்தீரா? உம்முடைய தலைக்குமேல் நிற்கிறேனே" என்று சொல்லி பழிப்பாய்ப் பேசினது. அப்பொழுது பனைமரம்: அதை அறிவேன் தம்பி! "வருஷா வருஷம் உன்னைப்போல ஒரு சுரை முளைத்து, வளர்ந்து என் தலைமேலேறி ஐந்தாறு மாதங்களுக்குள் அடியோடே பட்டுப்போகிறது; உன் வாழ்வும், தலையெடுப்பும் அது போலவே முடியும்; ஏன் வீண்பெருமை பேசுகிருய்? வாயைமூடு" என்று கண்டித்தது. "சீக்கிரம் பழுப்பது சீக்கிரம் உளுக்கும்." ஒன்றையும் வாதிஞலாவது வீண் பெருமையினுலாவது செய்யாமல், மனத்தாழ்மையி ஞலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையான வர்களாக எண்ணக்கடவீர்கள்.

70. நாம் எல்லாரும் சகோதரர். எய்.

சச்சரவு	சண்டை.
ஐக்கியம்	சிநேகம்.
வக்கணை	பழிப்பான பேர்.
நொந்து	துக்கப்பட்டு.
குடிபோனதால்	வாசம்பண்ணப் போனதால்.
மேனி	நிறம், அழகு.
மனுமக்கள்	மனுஷர்.

ஒரே தகப்பனுக்குப் பிறந்த ஆண்பிள்ளைகள் ஒருவருக்கொருவர் சகோதரராயும், பெண்பிள்ளைகள் சகோத்ரிகளாயும் இருக்கிருர்கள். ஒரு நல்ல தகப்பன் தன் பிள்ளைகளெல்லாரும் ஒருவரோடொருவர் சச்சரவு செய்யும்படி பிரியப்படுவானு? பிரியப்படவேமாட்டான்; அவர்கள் ஐக்கியமாய் இருக்கத்தான் ஆசைப்

படுவான். தன் பிள்ளைகள் ஒருவனையொருவர் வக்கணை எடுத்துத் திட்டிக்கொண்டிருக்க அவன் பார்த்தால், மனம் நொந்து சஞ்சலமடைவான். இவ்வுலகத்திலுள்ள நாம் அனைவரும் ஒரே பிதாவாகிய தேவனால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறபடியால் ஒரே தகப்பனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம்; ஆகையால் நாமெல்லாரும் ஒருவருக்கொருவர் சகோதாரும், சகோதரிகளுமாய் இருக்கிறோம்.

ஆதாம், ஏவாள் என்னும் ஆதித் தாய்தந்தையின் வழியாகவே நாம் எல்லாரும் பிறந்திருக்கிறோம். ஐரோப்பியரும் இந்துக்களும் முன் ஒரு காலத்தில் ஒரே இடத்தில் குடியிருந்து, ஒரே பாஷையைப் பேசி, ஒரே நிறமுடையவர்களாய் இருந்தோம்; பின்பு நம்மில் சிலர் அதிகக் குளிர் உள்ள தேசங்களில் குடிபோனதால் மேனி வெண்மையாயும், சிலர் அதிக உஷ்ணமுள்ள தேசங்களில் குடிபோனதால் மேனி கறுப்பாயும் போய் விட்டது. நாம் பிரிந்துபோனதால் நம்முடைய பாஷையும் மாறிப்போயிற்று. நம்முடைய தேசத்தார் அவன் அந்த ஜாதி, இவன் இந்த ஜாதி என்று சொல்லுகிறார்கள். கடவுள் அப்படியே வெவ்வேறு ஜாதியாகப் பிரிக்கவில்லை. மனுமக்கள் எல்லாரையும் அவர் ஒரேமாதிரியாகவும், ஒரேவிதமான அவயவங்கள் உள்ளவர்களாகவும் படைத்திருக்கிறார். தம்மை நாம் அறிந்து அன்புகூரும்படியாக நம்மெல்லாருக்கும் ஒரேவிதமான ஆத்துமாவையும் தந்திருக்கிறார். நாம் எல்லாரும் சகோதரர்தான்; ஆகையால் ஒருவரோடொருவர் ஐக்கியமாயிருக்கவேண்டும்.

71. அது தேருகிறவகை அல்ல. எக.

அக்கிள் .... கையின் பள்ளம்.
பிணக்கு .... மனமில்லாமை.
விர்த்தி .... தேர்ச்சி.

ஒருநாள் கோபால் பாடசாலையிலிருந்து வீட்டுக்குப் போனான்; அவனுடைய அக்கிளுக்குள் அவன் கணக்கு எழுதிப்படிக்கிற கற்பலகை இருந்தது. அவனை அறிந்த ஒரு துரை வழியில் கண்டு கூப்பிட்டு:—"கோபால்! கணக்குப்பாடம் உனக்கு எப்படியிருக்கிறது?" என்று கேட்டார்.

"என்ன ஐயா, கணக்கு ஒரு படிப்பா? கணக்கு என்றால் எனக்குப் பிணக்குத்தான்."

"நீ உன் வகுப்பில் கணக்குக் கூட்டுகிறதில்லையா?"

"என் கணக்கையெல்லாம் ராமன் முடித்துத் தருகிறான், அதை வைத்துக்கொண்டு காட்டிப்போடுகிறேன்."

"அப்படியா, உன் சோற்றையெல்லாம் ராமனைத் தின்னச் சொல்லக்கூடாதா?"

"ராமன் தின்றால் நான் பிழைப்பதெப்படி? நான் சாகவா?"

"பின்னை உன் கணக்கையெல்லாம் ராமன் செய்வதெப்படி? நீயே படியாவிட்டால் உன் புத்தி எப்படி விர்த்தியாகும்? உன் கணக்கை ராமன் செய்யவேண்டுமானால் உன் சோற்றையும் கொடுத்துவிட்டுச் சும்மாயிரு, ராமன் உன் சோற்றையும் தின்று உன் படிப்பையும் படிக்கட்டும்."

"அப்படியா நியாயம்! பின்னை என் கணக்கை நானே நன்றாய்க் கற்கிறேன் ஐயா!"

"அப்படியே செய் கோபால்; உன் கணக்கை நீயே கற்றுக்கொள்."

72. சூரியனும் சந்திரனும். எஉ.

ஏககுளிர்............ அதிகமான குளிர்.
ஜீவனும்............ பிராணியும்.
சுழன்று............ சுற்றி.
சந்திரன்............ நிலா.
துலக்கம்............ வெளிச்சம்.
ஒளிபெற்று............ பிரகாசமடைந்து.

சூரியன் நமக்கு ஒளியையும் உஷ்ணத்தையும் தருகிறது. சூரியனே இல்லாவிட்டால் எப்படி இருக்கும்? எங்கும் இருட்டும் ஏக குளிருமாயிருக்கும். ஒரு செடியும் முளையாது ஒரு ஜீவனும் பிழையாது.

சூரியன் இந்த பூமியைப்பார்க்கிலும் அநேக பங்கு பெரியது, அப்படிப் பெரிதாய் இருந்தாலும் அதிக தூரத்திலிருப்பதால் சிறிதாய்க் காணப்படுகிறது. சூரியன் ஓடுகிறதாக சிலர் நினைக்கிறார்கள், சூரியன் ஓடுகிறதில்லை. பூமியானது தன்னிலே சுழன்றுகொண்டு சூரியனைச் சுற்றி ஓடுகிறது. பூமி தன்னில்தான் ஒருதரம் சுழல ஒருநாள் பிடிக்கிறது. இந்தச் சுழற்சியினாலேதான் இரவு பகல் என்கிற வித்தியாசம் உண்டா

கிறது. நமக்குப் பகலாயிருக்கையில் பூமியின் மறுபக்கத்திலிருப்பவர்களுக்கு இரவாய் இருக்கும்.

சந்திரன் இராக்காலத்தில் பிரகாசிக்கிறது. சந்திரப் பிரகாசம் சூரியப்பிரகாசத்தைப்போலத் துலக்கமாயிராது. சந்திரன் தன்னிலே ஒளியுள்ளதல்ல; அது சூரியனிடத்தில் ஒளிபெற்றுப் பிரகாசிக்கிறது. பூமியிலிருப்பதுபோல சந்திரனில் கற்களும், மலைகளுமிருந்தபோதிலும் ஜலமில்லை. சந்திரன் பூமியைப்பார்க்கிலும் சிறியது. அது பூமியை ஒருதரம் சுற்ற ஒரு மாதம் செல்லுகிறது. இந்த பூமி சூரியனைச் சுற்ற ஒரு வருஷம் பிடிக்கிறது.

73. இரக்கமின்மை.* எந.

கோபாலுக்கும் ராமனுக்கும் நடந்த சம்பாஷணை.

இன்மை .... இல்லாமை.
சம்பாஷணை .... இரண்டுபேர்பேசிக்கொள்ளுவது.
வாடி .... சோர்ந்து, துக்கமாய்.
திட்டினாய் .... ஏசினாய்.
பொடிப்பயல்..... .... மெத்தச் சிறுவன்.

கோபால்: தம்பி ராமு! உன் முகம் வாடியிருக்கிறதே; எங்கே போயிருந்தாய்?

ராமன்: விளையாடப்போனேன்! கந்தன் ஓடிவந்து, நீ போய்விடு உன்னை இங்கே சேர்க்கமாட்டேன் என்று சொன்னான்.

கோ. ஏன் சேர்க்கமாட்டானாம்? அவனை நீ திட்டினாயாக்கும்?

ரா. என் வாயைத் திறக்கவில்லை அண்ணா! அப்போதுதான் போனேன்.

---

* இரண்டு பிள்ளைகள் சம்பாஷிக்கிறதுபோல வாசிக்கலாம்.

கோ. பின்னை ஏன் அவன் உன்னைச் சேர்க்கமாட்டேன் என்று துரத்தினான்?

ரா. அவர்கள் பெரியவர்களாம், நான் சின்னவனாம், சின்னப்பயலுக்கு இங்கே என்ன, போடா என்று துரத்துகிறான், அவன் நாலு வருஷத்துக்குத்தானே மூத்தவன்.

கோ. போன கிழமையில் நீ கோவிந்தனை அடித்துத் துரத்தி, சின்னப்பயலுக்கு எங்களோடு என்ன விளையாட்டு என்று சொல்லிவிட்டாயல்லவா? அவன் அழுதுகொண்டுவந்தானே.

ரா. கோவிந்தனா? அவன் பொடிப்பயலாச்சுதே அண்ணா?

கோ. கோவிந்துக்கும் உனக்கும் இருக்கிற வயது வித்தியாசம் அவ்வளவு கந்தனுக்கும் உனக்கும் இல்லையா?

ரா. ஆம், அது மெய்தான்.

கோ. கோவிந்து சின்னப்பயலென்று துரத்திவிட்டாயே, அவனும் உன்னைப்போல துக்கப்பட்டிருப்பான் அல்லவா?

ரா. கோவிந்துமேல் ஒருவருக்கும் பிரியமில்லையே.

கோ. அப்படியானால் அவனைப்போல் இராதே. நீ முன்செய்ததுபோல சிறு பிள்ளைகளை அடிக்கக்கூடாது, அவர்களோடு அதிகப் பட்சமாயிருக்கவேண்டும், அப்போது எல்லாப் பிள்ளைகளும் உன்னை நேசிப்பார்கள்.

74. முட்சேவ்வந்தி. எச.

புஷ்பராணி.......... பூக்களின் ராஜாத்தி.
இணையான ...., சமமான.
நந்தவனம் .... பூந்தோட்டம்.
பரிமளம் .... வாசனை.
மாட்டி .... சொருகிவைத்து.
முடிமன்னர் .... ராஜாக்கள், கிரீடாதிபதிகள்.

புஷ்பராசிகளில் முட்செவ்வந்தி முக்கியமானது, ஆனதால் இதைப் புஷ்பராணி என்று சொல்வது உண்டு. அழகிலும், மணத்திலும் அதற்கு இணையான புஷ்பம் வேறில்லை. முட்செவ்வந்தி என்பது ரோசாச் செடிதான்.

ரோசாச்செடியில் பலமாதிரியுண்டு. அதின் புஷ்பம் சாதாரணமாய் சிவப்பாயிருக்கும். சிலமாதிரி ரோசா வெள்ளைப் பூப்பூக்கும். அதின் கிளைகளிலும், இலைக ளின் ஓரங்களிலும் முள்ளிருக்கும். காட்டு ரோசாவின் பூக்கள் வீட்டு ரோசாவின் பூக்களைப்போல பெரியதா யிராது.

சில தேசங்களில் விஸ்தாரமான ரோசா நந்தவனங் களுண்டு. ரோசாப் புஷ்பங்களிலிருந்து எடுக்கும் பன் னீர் பரிமளம்பொருந்தியதாயிருக்கும். புஷ்பங்களை

ஜலமுள்ள ஒரு பானைக்குள் போட்டு, நீராவி வெளியே போகாதபடி நன்றாய் மூடி கொதிக்கவைப்பார்கள். அந்தப் பானையின் விலாவில் ஒரு துவாரமிட்டு அத்துவாரத்தில் ஒரு குழல் மாட்டியிருக்கும்; பானைக்குள் கொதிக்கும் ஜலத்தின் ஆவி அக்குழல்வழியாய் வருகிறதற்குள்ளாகக் குளிர்ந்துபோய் தண்ணீராய் வடியும். அப்படி வடியும் நீர் பன்னீர் என்னப்படும். பன்னீரின்மேல் ரோசாவின் எண்ணெய் மிதக்கும், அது அத்தர் என்று சொல்லப்படும். அத்தர் அதிக விலையுள்ளது. ஒரு சொட்டு அத்தர் எடுக்க அநேக ரோசாப்புஷ்பங்கள் வேண்டியதிருக்கும்.

நம்மைச் சந்தோஷப்படுத்தும்படியாகவே, தேவன் புஷ்பங்களுக்கு மிகுந்த அழகையும், மணத்தையும் கொடுத்திருக்கிறார். முடிமன்னர்முதலாய் சில புஷ்பங்களைப்போல் அழகாய் உடுத்துகிறதில்லை.

75. பாக்கியமுள்ள ஏழை. எரு.

விருத்தாப்பியன்	கிழவன்.
நரை	வெள்ளைமயிர்.
ஊனம்	சேதம், முறிவு.
இரகசியம்	அந்தரங்கம்.
சம்பவித்தாலும்	நேரிட்டாலும்.
சதாகாலம்	முடிவில்லாதகாலம்.
அநுபவிக்கும்	அடையும்.

ஒரு சாலையோரமாய் விருத்தாப்பியனும், நொண்டியுமாயிருந்த ஒரு பிச்சைக்காரன் உட்கார்ந்திருந்தான். ஒருநாள் அவ்வழியே போன ஒரு சிறு பையன் அவனிடத்தில் சேர்ந்து: "அப்பா உன்னுடைய தலையோ நரை, காலோ ஊனம், கையிலோ ஒரு காசுமில்லை; அப்படியிருக்க இவ்வளவு முக-

மலர்ச்சியுள்ளவனுய் இருக்கிருயே அதெப்படி?" என்று கேட்டான். அதற்கு அந்த ஏழை மனுஷன்: "தம்பி, அந்த இரகசியம் சொல்லுகிறேன் கேள்;—எனக்கு ஒரு சிநேகிதன் இருக்கிருர், அவர் எப்போதும் என்மேல் பட்சமாயிருக்கிருர், நானும் எப்போதும் அவர்மேல் பட்சமாயிருக்கிறேன். அவர் என்னைக் கைவிடவேமாட்டாரென்பது நிசம், அதினுலேதான் எப்பொழுதும் என் முகம் மலர்ந்திருக்கிறது; என் சிநேகிதர் யாரென்று சொல்லட்டுமோ? கடவுளே என் சிநேகிதர், அவரை நம்பி ஜீவனம் செய்கிறவர்களுக்கு இவ்வுலகத்தில் என்ன சம்பவித்தாலும் அவையெல்லாம் நன்மைக்கென்றே சம்பவிக்கும். எனக்கு மரணம் வரும்போது என் ஆத்துமா என்னை நேசிக்கும் கர்த்தரோடு சதாகாலமாய்ப் பாக்கியத்தை அநுபவிக்கும்" என்று சொன்னுன்.

அந்த ஏழை மனுஷன் சொன்னது சரிதான். நம்மை நேசித்து நன்மையிலும் தீமையிலும் ஆதரித்து, நம்முடைய நன்மையையே எப்போதும் விரும்புகிறவரான ஒரு சிநேகிதனைச் சம்பாதித்துக்கொள்ளுவது அவசியம். இப்படிப்பட்ட சிநேகிதர் மனுஷரில் அகப்படமாட்டார்கள். இவ்வுலக சிநேகிதர் சீக்கிரம் சத்துருக்களாகிவிடுகிருர்கள். கண்ணுக்குக் கண்ணுன சிநேகிதரும் மண்ணுக்கு மண்ணுய் மறைந்துபோவார்கள். ஆனுல் கடவுளோ மாருத சிநேகிதரும் மரியாத நேசருமாயிருக்கிருர். அவர் உன்னுடைய சிநேகிதராயிருக்கும்படிப் பார்த்துக்கொள்.

76. எறும்பு. எசு.

பிராணி .... ஜீவன், ஜந்து.
வளை .... துவாரம், குழி.
சிப்பாய் .... சேவகன்.
எச்சரிக்கிறார் .... புத்திசொல்லுகிறார்.

எறும்புகள் சிறு பிராணிகளாயிருந்தாலும், அதிக முயற்சியுள்ளவைகள். ஒரு எறும்பு வளையண்டை உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருந்தால், சில எறும்புகள் இரைதேட ஓடுகிறதையும், சில எறும்புகள் செத்துப்போன ஈயையும், அரிசி முதலிய தானியங்களையும் இழுத்துக்கொண்டு வளைக்கு நேரே வருவதையும் காணலாம். சிலவேளைகளில் எறும்புகள் வெண்மையான சிறு உண்டைகளை கௌவிக்கொண்டு போகிறதைப் பார்க்கிறோமே, அவ்வெள்ளுண்டைகள் ஏதாவது ஒரு இரையா? இரையல்ல, முட்டைகள். எறும்புகள் தங்கள் முட்டைகளை அதிக கவலையோடு பேணும். எறும்புகளில் சில சிப்பாய்களாயும், மற்றவை வேலைசெய்கிறவைகளாயுமிருக்கும்.

மஞ்சள் நிறமான ஒருவித எறும்புண்டு. நாம் பாலுக்காக பசுமாடு வைத்துக்கொள்வதுபோல, அந்த எறும்புகள் ஒருமாதிரி புழுக்களை வளைக்குள் வைத்துக்கொண்டு அதின் சாரத்தைப் பால்போல குடிக்கும். எறும்

புகள் அதிகப் பிரயோசனமுள்ளவைகள்தான். எறும்புகள் இல்லாவிட்டால் செத்துப்போன ஜந்துக்களும், அழுகிப்போன வஸ்துக்களும் நாற்றமெடுத்து மனிதருக்குப் பலவித நோய்களை உண்டாக்கும்.

சாலொமோன் என்னும் ஒரு ஞானமுள்ள சக்கரவர்த்தி, சோம்பல்காரரைப் பார்த்து:—"சோம்பேறியே, எறும்பண்டைக்குப் போய் அதின் வழிகளைப் பார்த்து புத்தியாய் நட" என்று எச்சரிக்கிறார். எறும்புகள் தங்கள் ஆகாரத்தைச் சேர்த்துவைக்கும்படியாகப் பிரயாசப்படுகிறதுபோல நாமும் ஞானத்தைச் சம்பாதிக்கும்படி பிரயாசப்படவேண்டும்.

77. களவைக் குறித்து. எஎ.

காமனுக்கும் அவன் மாமனுக்கும் நடந்த சம்பாஷணை.

களவு	திருடுதல்.
மாமன்	தாய்கூடப் பிறந்தவன்.
வம்பு	வீணான சண்டை.
பறிகொடுக்க	திருடிக்கொள்ளவிட.

காமன்: மாமா, மாமா! கத்தியைப் பாரும், கத்தியைப் பாரும்! நல்ல கத்தி.

மாமன்: காமா! இதெப்படி அகப்பட்டது? நல்ல கத்தியாச்சுதே!

கா. கோபால் பைக்குள்ளிருந்து எடுத்துக்கொண்டேன்.

மா. என்ன? என்ன? கோபால் பைக்குள்ளிருந்து எடுத்தாயா? அப்படியானால் நீ திருடன் அல்லவா?

கா. பைக்குள்ளிருந்து எடுத்ததினாலே நான் திருடனாகும்.

மா. தன் பைக்குள்ளிருந்து எடுக்க கோபால் சொன்னானோ?

கா. சொல்லவில்லை,—அவன்தான் இல்லையே, எங்கேயோ போய்விட்டான். நான் எடுத்தது அவனுக்குத் தெரியாது, நான் ஆசைப்பட்ட பொருளை எடுக்கிறது திருட்டா?

மா. அது திருட்டுத்தான். உன் குல்லாவை அல்லது புஸ்தகத்தை நான் எடுத்துக்கொண்டால் சும்மாயிருப்பாயா?

கா. யார்தான் சும்மாயிருப்பார்கள்? நான் சும்மாயிருக்கமாட்டேன்; என் பொருளைப் பறிகொடுப்பேனு?

மா. பின்னை கோபால் பொருளை நீ எடுக்கலாமா? "களவு செய்யாதிருப்பாயாக" என்னும் கடவுளுடைய கட்டளை உனக்குத் தெரியாதா?

கா. மாமா! நாமேன் வம்பு வளர்க்கவேண்டும், கத்தியைத் தாரும், எடுத்த இடத்தில் வைத்துவிடுகிறேன். இனிமேல் திருடவேமாட்டேன்.

78. நோய்கொண்ட யானை. எ.அ.

கண்ணோவு	கண்ணில் வியாதி.
பாகன்	யானைக்காரன்.
வைத்தியன்	மருந்துகொடுக்கிறவன்.
அவிழ்தம்	மருந்து.
கலிக்கம்	மை, கண்ணில் போடும் மருந்து.
காரம்	எரிவு.
ஸ்தூலித்த	பருத்த, புஷ்டியான.

ஒரு யானைக்குக் கண்ணோவு உண்டாகி, மூன்று நாளாய் கண் மூடிப்போயிருந்தது. யானைப்பாகன் ஒரு வைத்தியனைக் கூட்டிக்கொண்டு வந்து, இதற்கு ஏதாவது அவிழ்தம் செய்யக்கூடுமா என்று கேட்டான். அதற்கு வைத்தியன்: நான் மனுஷ வைத்தியனேயல்லாமல் யானை வைத்தியனல்ல, ஆனாலும் மனுஷருடைய கண்ணோவுக்குப் போடுகிற கலிக்கத்



தையே போட்டுப் பார்க்கிறேன் என்று சொன்னான். அப்பால் பலரும் கூடி நோய்கொண்ட யானையைக் கீழே படுக்கவைத்தார்கள். வைத்தியன் அதின் கண்களில் கலிக்கமிட்டான். அந்தக் கலிக்கம் அதிகக் காரமானதால் யானைக் கண்ணில் எரிவெடுத்து, அந்த எரிவைச் சகிக்கமாட்டாமல் யானை கதறினது.

கலிக்கமிட்டது முதல் யானையின் கண்ணோய் சற்று குணமானது. அடுத்தநாள் காலையில் மறுபடியும் மருந்துபோடும்படி வைத்தியன் வந்தான். வைத்தியனுடைய குரலை யானை கேட்டவுடனே தானாய்ப் படுத்துத் தலையை ஒரு பக்கமாய் வைத்து, தும்பிக் கையை மடக்கிக்கொண்டு பெருமூச்சுவிட்டது. வைத்தியன் கலிக்கமிட்டவுடன் அது மறுபடியும் எழுந்து தன் தும்பிக்கையாலும், ஸ்தூலித்த தேகத்தை அசைத்த சாடையாலும் தன் நன்றியறிதலைக் காண்பித்தது. மிருகங்கள் காட்டுகிற நன்றி முதலாய் சில மனுஷருக்கு இல்லாமலிருக்கிறதை நாம் பார்க்கிறோம்.

79. ஜலம். எகூ.

ஸ்நானம் .... குளித்தல்.
பானம்... .... குடித்தல்.
சோனுமாரி .... பெருமழை.
மலருகின்றன .... பூக்கின்றன.
பாலேவனம் .... மணற்காடு.
படிகம் ... ... கண்ணுடி.

சுத்தமான ஜலம் தெளிவாயிருக்கும். அதற்கு யாதொரு நிறமாவது, ருசியாவது, மணமாவது இராது. ஸ்நானத்துக்கும், பானத்துக்கும், சமையலுக்கும் ஜலம் அதிகப் பிரயோசனமுள்ளது. சோனுமாரியாகப் பெய்யும் மழைத்தண்ணீரால் பச்சைப் புல்லும் மற்றச் செடிகளும் முளேத்து பல வருணமான புஷ்பங்கள் மலருகின்றன. ஜலமே இல்லேயானுல் இந்த பூமி முழுவதும் ஒரு விஸ்தாரமான பாலேவனம்போல் இருக்கும்.

சூரிய உஷ்ணம் ஜலத்தை ஆவியாக எழும்பச்செய்கிறது. அப்படி ஆவியாக எழும்புவதெல்லாம் ஒன்ருய்ச் சேர்ந்து மேகமாகிறது. அந்த மேகம் ஜலமாக மறுபடியும் மாறி பூமியில் மழையாகப் பெய்கிறது. மழைத்தண்ணீர் ஆறுகளில் கூடி பெருவெள்ளமாகி சமுத்திரத்துக்குள் பாய்கின்றன. ஆனுல் சமுத்திர ஜலம் சூரிய உஷ்ணத்தால் நிமிஷந்தோறும் ஆவியாக எழும்பி மேகத்தோடு சேருகிறதினுல் எத்தனேயோ ஆறுகளின் ஜலம் சமுத்திரத்துக்குள் விழுந்தாலும் அது நிரம்புகிறதில்லே. தரையில் ஊற்றினவுடனே ஓட அல்லது வற்றத்தக்கதாக இளகலாயிருக்கும். ஜலமானது மட்டுமிஞ்சின குளிரினுல் இறுகி, கல்லேப்போல் கட்டியாகிவிடும். கட்டிப்போன ஜலம், படிகம்போல் துலக்கமாயிருக்கும்.

அசுத்தமான ஜலத்தால் நோய்களுண்டாகும், ஆகை யால் கிணறுகளும் குளங்களும் எப்போதும் சுத்த மாயிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். இலை களாவது செத்தைகளாவது விழுந்து ஜலத்துக்குள் அழுகிப்போக இடங்கொடுக்கலாகாது.

80. இதுவே தருணம். அம.

மூத்து	கிழவனாகி.
பொழுது	சமயம்.
விவேகிகள்	புத்திமான்கள்.
அலட்சியம்	அசட்டை.
புஞ்சை	மேட்டுநிலம், தண்ணீரில்லாத தரை.
அவகாசம்	பலம், சக்தி.
இக்ஷணமே	இந்தநேரமே.
தருணம்	காலம்.
முதிர்வயது	பூரணவயது, விருத்தாப்பியம்.

வாலிபரிடத்தில்: அதை, அல்லது இதை இப்பொ ழுதே செய்யுங்கள் என்று யாராவது சொன்னால்; போம், போம்,—மூத்து நரைத்தாபோனேன்? பல் விழு ந்து கண் மாசுபடர்ந்தா போயிற்று? இன்னும் நாளும் பொழுதும் இல்லையா? என்று அலட்சியமாய்ப் பேசு வார்கள். "பாலவயது காலமறியாது;" அதாவது வாலிபருக்குக் காலத்தின் அருமை தெரியாது. தரு ணம் தப்பினால் மரணமல்லவோ?

நாம் அடிக்கடி, இப்போதென்ன அவசரம்? விருத் தாப்பியத்தில் அறிவாளிகளும், விவேகிகளுமாகலாம் என்று சொல்லுகிறோம். நினைத்தநேரம் பெருமழை பெய்யுமா? எருது நினைத்தநேரம் புஞ்சை உழுவா ருண்டா? நமக்கு வயது ஆக ஆக, நாம் நினைத்ததை நிறைவேற்ற அவகாசமற்றுப்போனோம் என்று நாமே உணர்ந்து துக்கப்படுவோம். இன்று செய்யவேண்

டியதை நாளைக்கென்று கடத்திவைக்கவே கூடாது. இன்றென்பது நம்முடைய நாள், நாளை என்பது தேவனுடைய நாள்.

உனக்கு அறிவும், ஞானமும் வேண்டுமென்று நீ விரும்பினால் இக்ஷணமே அதை நாடு. அதற்கு இதுவே தருணம். "வாலவயதை அசட்டையில் கழித்தால்" முதிர்வயதில் அறிவும் ஞானமும் கிட்டாது. நீ மனுஷனாகும் காலத்தில் எல்லாரும் உன்னைக் கனம் பண்ணி, நேசிக்கவேண்டுமென்று எண்ணினால் இப்பொழுதே அதற்கேற்ற பிரயத்தனம் செய். அதற்கு இதுவே தருணம்.

காலை ஜெபம்.

ஆண்டவரே! போன ராத்திரியில் என்னைக் காப்பாற்றி இந்தப் பகலைக் காணும்படி கிருபைசெய்ததற்காக உம்மை ஸ்துதிக்கிறேன். நான் செய்த பாவங்களுக்கு ஒரு கணக்கில்லை. என் பாவங்கள் எல்லாவற்றையும் இயேசுகிறிஸ்துவினிமித்தம் மன்னித்து, உம்முடைய பரிசுத்த ஆவியைக்கொண்டு எனக்குள் சுத்த இருதயத்தைச் சிருஷ்டித்தருளும். இன்று பகலில் நான் பாவஞ்செய்யாதபடி என்னைக் காத்து புண்ணியம் செய்யும்படி ஏவியருளும். என் சிநேகிதரையும் பந்துக்களையும் ஆசீர்வதித்து, அவர்களும், சகல மனுஷரும் உம்மை அறிந்து, உம்மில் அன்புகூரும்படி அருள்புரியும். இந்த விண்ணப்பத்தை இயேசுகிறிஸ்துவின்மூலமாய் அநுக்கிரகித்தருளவேண்டுமென்று தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

மாலே ஜெபம்.

கிருபையுள்ள கர்த்தாவே! இந்த இரவில் அடியேனைக் கண்ணோக்கிப்பாரும். கடந்த பகலில் நான் நினைவாலும், வார்த்தையாலும், செய்கையாலும் நடப்பித்த பாவங்களையெல்லாம் இயேசுகிறிஸ்துவினிமித்தம் தயவாய் மன்னித்தருளும், உம்முடைய பரிசுத்த ஆவியானவர் என் இருதயத்தைச் சுத்தமாக்குவாராக. என் சிநேகிதனையும், சகல மனிதனையும் ஆசீர்வதித்தருளும். இந்த இராத்திரியில் நேரிடும் சகல விக்கினங்களுக்கும் மோசங்களுக்கும் என்னை விலக்கிக் காத்து, நான் உயிரோடிருக்கும் காலமெல்லாம் உமக்குப் பிரியமாய் நடந்துவரும்படி என்னை ஏவி, நான் மரிக்கும்போது என் ஆத்துமா உம்மோடு சதாகாலமாய் வாழ்ந்திருக்கக் கிருபைசெய்யும். இந்த மன்றாட்டை இயேசுகிறிஸ்துவின் நாமத்தின் மூலமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆமென்.

கிறிஸ்து தமது சீஷருக்குப் படிப்பித்த ஜெபம்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும். எங்களுக்கு விரோதமாய்க்

குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல் தீமையினின்று எங்களை ரட்சித்துக்கொள்ளும். ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

சாப்பிடுமுன் செய்யும் ஜெபம்.

கர்த்தாவே! எனக்குத் தந்த ஆகாரத்தை ஆசீர்வதித்து என் ஆத்துமாவை ஜீவ அப்பத்தால் போஷிக்க வேண்டுமென்று இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறேன். ஆமென்.

சாப்பிட்டபின் செய்யும் ஜெபம்.

கர்த்தாவே! நான் இப்பொழுது உண்ட உணவுக்காக உம்மை ஸ்துதிக்கிறேன். இந்த உணவினால் அடையும் பலத்தால் உம்மை நேசிக்கவும் உமக்கு ஊழியஞ்செய்யவும் இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கிருபைசெய்தருளும். ஆமென்.

ஆத்திசூடி

சுருக்கம்.

1. அறஞ்செய விரும்பு.

பதவுரை. அறம், தருமம்; செய, செய்ய; விரும்பு, ஆசைகொள்ளு.

பொழிப்புரை. தருமத்தைச் செய்ய நீ ஆசைகொள்ளு.

2. ஆறுவது சினம்.

பத. ஆறுவது, தணிவது; சினம், கோபம்.
பொழி. தணியத்தகுவது கோபம்.

3. உடையது விளம்பேல்.

பத. உடையது, உள்ளது; விளம்பேல், சொல்லாதே.
பொழி. உன் கையில் உள்ளதைப் பிறருக்குச் சொல்லாதே.

4. ஊக்கமது கைவிடேல்.

பத. ஊக்கமது, தைரியம்; கைவிடேல், கைவிடாதே.
பொழி. தைரியத்தைக் கைவிடாதே.

5. எண்ணெழுத் திகழேல்.

பத. எண், கணிதம்; எழுத்து, இலக்கணம்; இகழேல், அசட்டைசெய்யாதே.

பொழி. கணிதநூலையும் இலக்கணநூலையும் அசட்டை செய்யாதே.

6. ஏற்ப திகழ்ச்சி.

பத. ஏற்பது, இரப்பது; இகழ்ச்சி, இழிவு.
பொழி. இரந்துண்பது இழிவு.

7. ஒப்புர வொழுகு.

பத. ஒப்புரவு, முறைமை; ஒழுகு, நட.
பொழி. முறைமையாக நடந்துகொள்.

8. ஓதுவ தொழியேல்.

பத. ஓதுவது, கற்பது; ஒழியேல், விடாதே.
பொழி. நூல் கற்பதை விடாதே.

9. ஔவியம் பேசேல்.

பத. ஔவியம், பொருமை; பேசேல், பேசாதே.
பொழி. பொருமை பேசாதே.

10. கண்டொன்று சொல்லேல்.

பத. கண்டு, பார்த்து; ஒன்று, ஒன்று; சொல்லேல், சொல்லாதே.
பொழி. கண்டதை மறைத்து மற்ருென்றைச் சொல்லாதே.

11. தந்தைதாய்ப் பேண்.

பத. தந்தை, தகப்பன்; தாய், தாய்; பேண், காப்பாற்று.
பொழி. தகப்பனையும் தாயையும் காப்பாற்று.

12. நன்றி மறவேல்.

பத. நன்றி, நன்மை; மறவேல், மறவாதே.
பொழி. ஒருவர் செய்த உபகாரத்தை மறவாதே.

13. பருவத்தே பயிர்செய்.

பத. பருவத்தே, காலத்தே; பயிர், பயிர்; செய், செய்.
பொழி. தக்ககாலத்தையறிந்து பயிரிடு.

14. இயல்பலா தனசெயேல்.

பத. இயல்பு, ஒழுக்கம்; அலாதன, அல்லாதவை; செயேல், செய்யாதே.
பொழி. தகாத காரியங்களைச் செய்யாதே.

15. வஞ்சகம் பேசேல்.

பத. வஞ்சகம், கபடம்; பேசேல், பேசாதே.
பொழி. கபடமான சொற்களைப் பேசாதே.

16. இளமையிற் கல்.

பத. இளமையில், சிறுவயதில்; கல், படி.
பொழி. சிறுவயதிலே வித்தையைக் கற்றுக்கொள்ளு.

17. அறனை மறவேல்.

பத. அறனை, தருமத்தை; மறவேல், மறவாதே.
பொழி. தருமத்தை மறவாதே.

18. கீழ்மை யகற்று.

பத. கீழ்மை, இழிவு; அகற்று, நீக்கு.
பொழி. இழிவானவைகளை நீக்கு.

19. குணமது கைவிடேல்.

பத. குணமது, குணமுள்ளது; கைவிடேல், விட்டு விடாதே.
பொழி. நலமானதை விட்டுவிடாதே.

20. கூடிப் பிரியேல்.

பத. கூடி, சேர்ந்து; பிரியேல், விலகாதே.
பொழி. நல்லவரோடு சேர்ந்து பின்பு பிரியாதே.

21. கெடுப்ப தொழி.

பத. கெடுப்பது, கெடுதிசெய்வது; ஒழி, நீக்கு.
பொழி. ஒருவருக்குக் கெடுதிசெய்வதை நீக்கிவிடு.

22. கேள்வி முயல்.

பத. கேள்வி, கேள்வி; முயல், முயற்சிசெய்.
பொழி. கற்றோர் சொல்லும் நூலின் பொருளைக் கேட்க முயற்சிசெய்.

23. கொள்ளை விரும்பேல்.

பத. கொள்ளை, கொள்ளையிடுதல்; விரும்பேல்; இச்சியாதே.

பொழி. பிறர் பொருளைக் கொள்ளையிட இச்சியாதே.

24. கோதாட் டொழி.

பத. கோது, குற்றம்; ஆட்டு, விளையாட்டு; ஒழி, நீக்கிவிடு.

பொழி. குற்றமான விளையாட்டை விட்டுவிடு.

25. சக்கர நெறிநில்.

பத. சக்கரம், ஆக்கினை; நெறி, வழி; நில், நில்லு.

பொழி. அரசனுடைய ஆக்கினைவழியில் நில்லு.

26. சான்றோ ரினத்திரு.

பத. சான்றோர், அறிவுடையோர்; இனத்து, கூட்டத்து; இரு, சேரு.

பொழி. அறிவுடையோரது கூட்டத்திற் சேர்ந்திரு.

27. சுளிக்கச் சொல்லேல்.

பத. சுளிக்க, கோபமடைய; சொல்லேல், சொல்லாதே.

பொழி. கேட்போர் கோபமடையப் பேசாதே.

28. சூது விரும்பேல்.

பத. சூது, சூதாடுதல்; விரும்பேல், இச்சியாதே.

பொழி. சூதாடுதற்கு ஆசைப்படாதே.

29. செய்வன திருந்தச்செய்.

பத. செய்வன, செய்பவை; திருந்த, திருத்தமாக; செய், செய்.

பொழி. செய்பவைகளைத் திருத்தமாகச் செய்.

30. சேரிட மறிந்துசேர்.

பத. சேர், சேருகிற; இடம், ஸ்தலம்; அறிந்து, தெரிந்து; சேர், சேர்ந்திரு.

பொழி. சேரத்தக்க இடத்தையறிந்து சேர்ந்திரு.

31. சோம்பித் திரியேல்.

பத. சோம்பி, சோம்பலாக; திரியேல், திரியாதே.
பொழி. சோம்பேறியாகத் திரிந்து அலையாதே.

32. தக்கோ னெனத்திரி.

பத. தக்கோான், யோக்கியன்; என, என்ன; திரி, நட.
பொழி. உன்னை யோக்கியன் என்று பிறர் சொல்லும்படி நடந்துகொள்.

33. தீவினையகற்று.

பத. தீ, பாவம்; வினை, செய்கை; அகற்று, நீக்கு.
பொழி. பாவச்செய்கையை நீக்கிவிடு.

34. தூக்கிவினைசெய்.

பத. தூக்கி, ஆராய்ந்து; வினை, தொழில்; செய், செய்.
பொழி. தொழிலை ஆராய்ந்து செய்.

35. தெய்வ மிகழேல்.

பத. தெய்வம், கடவுள்; இகழேல், நிந்தியாதே.
பொழி. கடவுளை நிந்தியாதே.

36. நன்மை கடைப்பிடி.

பத. நன்மை, நலம்; கடைப்பிடி, உறுதியாகப்பிடி.
பொழி. நலமுள்ளவற்றை உறுதியாகப் பிடி.

37. நூற் பலகல்.

பத. நூல், சாஸ்திரம்; பல, அநேகம்; கல், கற்றுக்கொள்.
பொழி. பல சாஸ்திரங்களைக் கற்றுக்கொள்.

38. நோய்க் கிடங்கொடேல்.

பத. நோய்க்கு, வியாதிக்கு; இடங்கொடேல், இடங்கொடாதே.
பொழி. வியாதிக்கு இடங்கொடாதே.

39. பழிப்பன பகரேல்.

பத. பழிப்பன, இகழப்படுபவை; பகரேல், பேசாதே.
பொழி. இகழப்படுபவைகளைப் பேசாதே.

40. பிழைபடச் சொல்லேல்.

பத. பிழை, குற்றம்; பட, உண்டாக; சொல்லேல், பேசாதே.
பொழி. குற்றம் உண்டாகப் பேசாதே.

41. பீடு பெறநில்.

பத. பீடு, பெருமை; பெற, அடைய; நில், நில்லு.
பொழி. பெருமையை அடைய நல்வழியில் நில்லு.

42. பொருடனைப் போற்றிவாழ்.

பத. பொருள்தனை, திரவியத்தை; போற்றி, காப்பாற்றி; வாழ், வாழு.
பொழி. திரவியத்தைக் காப்பாற்றி வாழு.

43. மாற்ருனுக் கிடங்கொடேல்.

பத. மாற்றனுக்கு, எதிரிக்கு; இடங்கொடேல், இடங் கொடாதே.
பொழி. எதிரிக்கு இடங்கொடாதே.

44. மிகைபடச் சொல்லேல்.

பத. மிகை, அதிகம்; பட, உண்டாக; சொல்லேல், பேசாதே.
பொழி. தகுதிக்கு அதிகமாகப் பேசாதே.

45. மீதூண் விரும்பேல்.

பத. மீது, அதிகம்; ஊண், சாப்பாடு; விரும்பேல், இச்சியாதே.
பொழி. அதிகமான உணவை இச்சியாதே.

46. மேன்மக்கள் சொற்கேள்.

பத. மேன்மக்கள், உயர்ந்தோர்; சொல், வார்த்தை; கேள், கேளு.
பொழி. உயர்ந்தோருடைய சொல்லைக் கேளு.

47. மொழிவ தறமொழி.

பத. மொழிவது, சொல்லுவது; அற, திருத்தமாக; மொழி, சொல்லு.

பொழி. சொல்வதைத் திருத்தமாகச் சொல்லு.

48. வல்லமை பேசேல்.

பத. வல்லமை, வலிமை; பேசேல், பேசாதே.

பொழி. உனக்குள்ள வல்லமையைப் புகழ்ந்துபேசாதே.

49. வாதுமுற் கூறேல்.

பத. வாது, தர்க்கம்; முன், முந்தி; கூறேல், பேசாதே.

பொழி. முந்தி தர்க்கம் பேசாதே.

50. ஓரஞ் சொல்லேல்.

பத. ஓரம், பக்ஷபாதம்; சொல்லேல், சொல்லாதே.

பொழி. பக்ஷபாதமாகப் பேசாதே.

S. P. C. K. Press, Vepery, Madras. 1886.

பெருக்கல் வாய்பாடு.

2	3	4	5	6	7	8	9	10	11	12
1 = 2	1 = 3	1 = 4	1 = 5	1 = 6	1 = 7	1 = 8	1 = 9	1 = 10	1 = 11	1 = 12
2 4	2 6	2 8	2 10	2 12	2 14	2 16	2 18	2 20	2 22	2 24
3 6	3 9	3 12	3 15	3 18	3 21	3 24	3 27	3 30	3 33	3 36
4 8	4 12	4 16	4 20	4 24	4 28	4 32	4 36	4 40	4 44	4 48
5 10	5 15	5 20	5 25	5 30	5 35	5 40	5 45	5 50	5 55	5 60
6 12	6 18	6 24	6 30	6 36	6 42	6 48	6 54	6 60	6 66	6 72
7 14	7 21	7 28	7 35	7 42	7 49	7 56	7 63	7 70	7 77	7 84
8 16	8 24	8 32	8 40	8 48	8 56	8 64	8 72	8 80	8 88	8 96
9 18	9 27	9 36	9 45	9 54	9 63	9 72	9 81	9 90	9 99	9 108
10 20	10 30	10 40	10 50	10 60	10 70	10 80	10 90	10 100	10 110	10 120
11 22	11 33	11 44	11 55	11 66	11 77	11 88	11 99	11 110	11 121	11 132
12 24	12 36	12 48	12 60	12 72	12 84	12 96	12 108	12 120	12 132	12 144
13 26	13 39	13 52	13 65	13 78	13 91	13 104	13 117	13 130	13 143	13 156
14 28	14 42	14 56	14 70	14 84	14 98	14 112	14 126	14 140	14 154	14 168
15 30	15 45	15 60	15 75	15 90	15 105	15 120	15 135	15 150	15 165	15 180
16 32	16 48	16 64	16 80	16 96	16 112	16 128	16 144	16 160	16 176	16 192